Registered as a Newspaper    பக்கங்கள் 6    விலை ரூபா 5-00


# ஈழநாதம்

The Eelanaatham    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 5    திருவள்ளுவர் ஆண்டு 2025    புரட்டாதி 29    15-10-94    சனிக்கிழமை    ஓசை 239

## அரசு - புலிகள் பேச்சு ரூபவாஹினியில் ஒளிபரப்பு

அரச தரப்புக் குழுவினர் நேற்று முன்தினம் உலங்குவானூர்தி மூலம் யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் இறங்கியதும் அங்கு குழுமி நின்ற பெருமளவு பொதுமக்கள் கையசைத்து அவர்களை வரவேற்கும் நிகழ்வை நேற்று ரூபவாஹினி தனது செய்தியின் போது ஒளி பரப்பியது- அரச குழுவினரை விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் (6ம் பக்கம் பார்க்க)



நேற்று விடுதலைப் புலிகள் அரசியற்துறைச் செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிற்கு அரச பிரதிநிதி பலபத்தபெண்டி, விடுதலைப்புலிகளின் பிரதிநிதி கரிகாலன் உட்பட பிரதிநிதிகள் வருகை தருவதை முதலாவது படத்திலும், பத்திரிகையாளர் மாநாட்டில் இருதரப்பு பிரதிநிதிகளும் கலந்து கொள்வதை இரண்டாவது படத்திலும், மாநாடு முடிவடைந்த பின் பத்திரிகையாளரின் கேள்விகளுக்கு பலபத்தபெண்டி பதிலளிப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# முதலாம் கட்டப் பேச்சுகளில் முன்னேற்றம்;

# 10 தினங்களில் இரண்டாம் கட்டப் பேச்சு

## புலிகள் - அரசு கூட்டறிக்கையில் தெரிவிப்பு

18 மீனவர்

# முதலாம் கட்டப் பேச்சுகளில் முன்னேற்றம்;

# 10 தினங்களில் இரண்டாம் கட்டப் பேச்சு

## புலிகள் - அரசு கூட்டறிக்கையில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளுக்கும், அரசாங்க தரப்பு பிரதிநிதிகளுக்கும் இடையில், நேற்றும், நேற்று முன்தினமும் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது, தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள், போக்குவரத்துப் பாதை திறப்பு மற்றும் யுத்த நிறுத்தம் போன்ற விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

பரஸ்பர நல்லெண்ண அடிப்படையில் ஆக்கபூர்வமான முறையில் நடைபெற்ற இப் பேச்சுக்கள் முன்னேற்றம் கண்டதைத் தொடர்ந்து அடுத்தகட்டப் பேச்சுவார்த்தை இன்னும் பத்து நாட்களில் ஆரம்பமாகுமென, முதல்கட்ட பேச்சுவார்த்தைகள் தொடர்பாக விடுக்கப்பட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் இயக்கப் பிரதிநிதிகளும் அரசாங்க தரப்பு பிரதிநிதிகளும் இரண்டு நாள் நடைபெற்ற முதலாம் கட்டப் பேச்சுவார்த்தை தொடர்பாக விடுத்த கூட்டறிக்கையின் விபரம் வருமாறு:-

## 12 மணிநேர முதலாம்கட்ட பேச்சுக்கள்

தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் அரச தரப்பு பிரதிநிதிகளுக்கும் இடையில் கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் பரஸ்பரம் நல்லெண்ணத்தின் அடிப்படையில் ஆக்கபூர்வமான முறையில் நடைபெற்றது பல அமர்வுகளில் நடந்த பேச்சுக்கள் 12 மணித்தியாலங்கள் நீடித்தது;

போர் நிறுத்தம், போக்குவரத்திற்கான பாதை திறத்தல், பொருளாதாரப் புனர்நிர்மாணம்போன்ற விடயங்கள் இப் பேச்சுக்களில் முக்கிய இடம்பெற்றன விடுதலைப்புலிகளின் குழுவுக்கு தலைமைதாங்கிய திரு. கரிகாலன் நேற்றுக்காலை பேச்சுக்களை தொடக்கி வைத்து உரையாற்றும் பொழுது,

## ஐ.தே.க கோரிக்கைகளை நிராகரித்தது

நல்லெண்ணத்துடனும் திறந்த மனத்துடனும் விடுதலைப் புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைகளில் பங்கு பற்றுவதாக கூறினார் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமான காலந் தொட்டு எமது இயக்கத் தலைமை யுத்த நிறுத்தத்தையும் சமாதானப் பேச்சுவார்த்தைகளையும் வலியுறுத்தி வந்தது என்றும் முந்திய அரசு இந்தக் கோரிக்கைகளை நிராகரித்து வந்தது என்றும் கூறினார்.

திருமதி சந்திரிகா குமாரதுங்காவின் புதிய அரசாங்கம் சமாதான வழியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண உறுதி கொண்டு நிற்கின்றதென்றும் இந்தவகையில் எமது இயக்கத்தின் நோக்கில் கருத்தொற்றுமை நிலவுவதாகவும் அவர் வலியுறுத்தினார்.

## மக்கள் மீது யுத்தம் திணிக்கப்பட்டது

எமது மக்களின் மீது திணிக்கப்பட்ட யுத்தம் பாரிய சமூக பொருளாதார பிரச்சினைகளை உருவாக்கியுள்ளதென எடுத்து விளக்கிய திரு. கரிகாலன் ஆரம்ப கட்ட பேச்சுவார்த்தைகள் இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்,

சமாதானமும் இயல்பு நிலையும் ஏற்படுவதற்கு யுத்த நிறுத்தம் அவசியம் என எடுத்து விளக்கிய அவர் பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அது அவசியம் எனவும் எடுத்துக் கூறினார்.

அரசாங்க பிரதிநிதிகளின் குழுத்தலைவர் திரு பலபத்த பெண்டி தம் ஆரம்ப உரையின் போது தமிழ் மக்கள் எதிர் கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கு அரசாங்கம் ஆவலாக இருக்கிறது என்றும் விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை நடத்தி இப்பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான வழிவகைகளை ஆராயுமாறு பிரதமர் தமக்கு பணித்துள்ளதாக கூறினார் தமிழர் பிரச்சினை ஒரு தேசிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. என்றும் இதை தீர்த்து வைக்க அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது என்றும் தெரிவித்த அவர் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணும் வழிவகைகள் பற்றி ஆராய்வதும் தமது குழுவின் நோக்கமாக இருக்கின்றது என்றும் கூறினார். (6 ஆம் பக்கம் பார்க்க)

## 18 மீனவர் விடுவிப்பு

சிறிலங்கா கடற்படையினரால் யாழ்- குடாநாட்டின் கடற்பரப்பில் பரவலாக கைதுசெய்யப்பட்டு பலாலி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 18 மீனவர்கள் இன்று விடுவிக்கப்படவுள்ளனர்.

நேற்று யாழ்நகரில் இருந்து உலங்கு வானூர்தி மூலம் பலாலி முகாமுக்கு சென்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி இன்று காலை இம்மீனவர்களை அழைத்து வருவார்-

## பிரதமர் சந்திரிகாவிற்கு தலைவர் பிரபா வாழ்த்து

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் வாழ்த்துச் செய்தியொன்றை சமாதான பேச்சுக்களில் கலந்துகொள்ள யாழ்- சென்ற அரச தரப்பு பிரதிநிதிகள் சிறிலங்கா பிரதமர் சந்திரிகாவிற்கு கொண்டு வந்தனர் என பி-பி-ஸி தெரிவித்தது- மேலும் கோரிக்கைப் பட்டியல் ஒன்றையும் அவர்கள் கொண்டு சென்றதாகவும் அது தெரிவித்தது-

விடுதலைப் புலிகள் தரப்பு மிகுந்த நட்புறவுடனும் விட்டுக் கொடுக்கும் போக்கும் விருந்தோம்பும் பண்பும் உடையவர்களாக நடந்து கொண்டதாக அரச தரப்பு குழுவின் தலைவர் பலபத்த பெண்டி தெரிவித்ததாக பி-பி-ஸி குறிப்பிட்டது-

## பேச்சுமூலம் பிரச்சினை தீர்க்கவே தலைவர் பிரபாகரன் விரும்புகிறார்

### செய்தியாளர் மகாநாட்டில் கரிகாலன்

(யாழ்ப்பாணம்)

எமது மக்களின் பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ளவே எமது தலைவர் விரும்புகின்றார் என அரசியல்துறை துணைப் பொறுப்பாளரும் விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தை பிரதிநிதிகளில் ஒருவருமான திரு கரிகாலன் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

செய்தியாளர் ஒருவரின் கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

யுத்தத்தை நிறுத்தச் சொல்கிறீர்கள். பாதையைத் திறக்கச் சொல்கிறீர்கள் முதல் கட்ட பேச்சுவார்த்தை முடிவடைந்த நிலையில், இவை சாத்தியமாகாவிடில் நீங்கள் தொடர்ந்து பேச்சுவார்த்தைக்கு இணங்க மாட்டீர்களா என்று செய்தியாளர் ஒருவர் கேட்டதற்கு எமது கோரிக்கைகள் நிறைவேறுவதற்கு நாம் தொடர்ந்து பேசுவோம் [6 ஆம் பக்கம் பார்க்க]

## யுத்தநிறுத்தம் பாதுகாப்பு அமைச்சுடன் பேசப்பட வேண்டிய விடயம்

### பத்திரிகையாளர் மாநாட்டில் பலபத்த பெண்டி

(யாழ்ப்பாணம்)

யுத்த நிறுத்தம் குறித்து நாம் விடுதலைப்புலிகள் தரப்பினருடன் பேசினோம். இதற்காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தோம். இவ்விடயத்தில் எந்த இறுதி முடிவும் எடுக்கப்படவில்லை என அரசத் தரப்பு குழுவின் தலைவர் பலபத்த பெண்டி தெரிவித்தார். செய்தியாளர் மாநாட்டில் வைத்து அவர் இக்கருத்தை வெளியிட்டார். யுத்த நிறுத்தம் பற்றி நாம் அரசுடன் கலந்து பேசி முடிவெடுப்போம். இது பாதுகாப்பு அமைச்சுடன் பேச வேண்டிய விடயம். போர் நிறுத்தம் என்பதற்கும் தாக்குதல் நிறுத்தம் என்பதற்கும் இடையில் வேறுபாடு உள்ளது. போர் நிறுத்தம் என்பது முற்றான நடவடிக்கை நிறுத்தமாகும். நடவடிக்கை நிறுத்தம் என்பது தற்காலிக நடவடிக்கையாகும். எனினும் போர் நிறுத்தம் பற்றி அலட்டிக் கொள்ளாது எமது பேச்சுகளை தொடர்வோம் என்றார்

## வரி விளம்பரம்

### எரு விற்பனைக்கு உண்டு

கிழ்க்காண் விலாசத்தில் எரு விற்பனைக்கு உண்டு; வாங்குபவர்கள் அலுவலகநேரத்தில் எருவை பார்வையிட்டு கூறுவிலையை சமர்ப்பிக்கவும் தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் எருவிற்கான கூறுவிலை என எழுதி பொதுமுகாமையாளர், யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்

(சி-10516)

### தவறிவிட்டது

3-10-94 அன்று யாழ்ப்பாணத்திற்கும் சங்கத்தானைக்கும் இடையில் செல்வரத்தினம்செந்தில்குமரன் என்பவருடைய அடையாள அட்டை தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் கிழ்வரும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.
செ. செந்தில்குமரன் தட்டா தெரு, சங்கத்தானை. (9687)

### தவறவிடப்பட்டு விட்டது

அளவெட்டி சிறீ நாகேஸ்வரம் ஆலய திருப்பணிக்குரிய பணம் 14-ம் திகதி கஸ்தூரியார் வீதியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர் மேற்படி ஆலயத்தில் ஒப்படைத்து உதவி புரியுமாறு வேண்டுகின்றேன் கறுப்பு நிற பெண்கள் கைப்பையுள் ஆறாயிரத்து பத்து ரூபாவும் இந்திய இரண்டு ரூபா இரு நோட்டுக்களும். (9689)

### கூட்டம்

சண்டிலிப்பாய் - தெல்லிப்பழைக் கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த அதிபர்களுக்கான கூட்டமொன்று எதிர்வரும் திங்கட்கிழமைமுறையே பிற்பகல் 2 30க்கு சண்டிலிப்பாய் கோட்டத்திற்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், தெல்லிப்பழைக் கோட்டத்திற்குபி.பகல் 12 30 மணிக்கு யா/மகாஜனக் கல்லூரியிலும் நடைபெறும் என பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

### தொழில் நுட்பக் கல்லூரி

# லெப். கேணல் விக்ரர் நினைவு மன்னாரில் அனுஷ்டிப்பு

மன்னார் மாவட்டத் தளபதியும் மத்தியகுழு உறுப்பினருமாய் இருந்து தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலேயே சிறிலங்காஇராணுவத்தை யுத்தக் கைதியாகப் பிடித்த பெரும் நேரடி மோதலிற்கு தலைமை தாங்கி அம்மோதலின் போதே வீரச்சாவினை அடைந்த லெப். கேணல் விக்ரரினதும் 2-ம் லெப். றோமினதும் 8-ம் ஆண்டு நினைவு நாள் கடந்த 12-ம் திகதி மன்னார்மாவட்டத்தில் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது. திருவுருவப் பட திரைநீக்கமும் அதனைத் தொடர்ந்து பெரு விளையாட்டுக்களின் இறுதி நிகழ்ச்சிகளும் இறுதிப் போட்டி நிகழ்ச்சிகளும் வீரவணக்கக் கூட்டமும், பரிசளிப்பு வைபவமும் கலை நிகழ்ச்சிகளும் அன்று நடைபெற்றது.

அன்று காலை பெரிய பண்டிவிரிச்சானில் அமைக்கப்பட்டிருந்தலெப்.கேணல்சுபனினது திருவுருவப்படத்தை அவரது பெற்றோரும் லெப். கேணல் ராதாவின் திருவுருவப்படத்தை அவரது தாயாரும் திரைநீக்கம் செய்து வைத்தனர் பின்னர் பரப்புக்கடந்தானில் அமைக்கப்பட்டிருந்த தளபதி லெப். கேணல் விக்ரரினது திருவுருவப்படத்தை அவரது தந்தையாரும் லெப். கேணல் வேணுவினது திருவுருவப்படத்தை வன்னிமுல்லை மன்னார் மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் நாவண்ணன் அவர்களும்லெப் நிதியின் திருவுருவப்படத்தை மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் ஸ்ரனிஸ்லோஸ் திரைநீக்கம் செய்து வைத்தனர்.

பின்னர் கருங்கண்டல் பாடசாலை மைதானத்தில் இறுதிப் போட்டி நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பின் ஆண்டான் குளபாடசாலை மைதானத்திற்கு மாலை6.30 மணியளவில் லெப் கேணல் விக்ரரது தந்தையும் 2-ம் லெப். றோமினது பெற்றோரையும் விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பாவரும் விடுதலைப் புலிகளின் பாண்ட் வாத்திய அணியினரும் அழைத்துவந்ததைத் தொடர்ந்து மாவட்டத் தளபதி பிரதான ஈகச் சுடரை ஏற்றி வைக்க இரு மாவீரரின் பெற்றோரும் தத்தமது பிள்ளைகளது திருவுருவப்படத்திற்கு ஈகச் சுடரை ஏற்றி வைத்தனர் பின் தமிழீழ விடுதலைப்புலிகள் உறுப்பினர் சங்கீதன் தலைமையில் ஆரம்பமான வீரவணக்கக் கூட்டத்தில் மாவட்ட துணை அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் அல்வின் மகளிர் அமைப்பைச் சேர்ந்த தமிழ்கவி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த குரு பிரதேச கல்விப்பணிப்பாளர் திருயேக்கப்மாவட்டத்தளபதி ஒலனும் உரை நிகழ்த்தினர்.

## தாயாரின் நினைவாக லயனல் மலரஞ்சலி

(குருநகர்)

அரச தூதுக்குழுவின் உறுப்பினர் திரு. லயனல் பெர்னான்டோ நேற்றுக் காலை 7.30 மணியளவில் குருநகர் பகுதியிலுள்ளதாயாரின்சிதை அமைந்த இடத்திற்கு வருகை தந்து மலரஞ்சலி செலுத்தினார்.

1977 ஆம் ஆண்டு திரு. லயனல் பெர்னான்டோ யாழ்- அரச அதிபராக இருந்த வேளை அவரது தாயார் காலமானதை அடுத்து யாழ்-நகரிலேயே இறுதிக் கிரியைகள் நடத்தப்பட்டன.

யாழ் சென்றோக்ஸ் விளையாட்டு மைதானமாக மாற்றமடைந்துள்ள அப் பகுதியில் திரு. லயனல் பெர்னான்டோவின் தாயாரது சிதை அமைக்கப்பட்ட இடத்திற்கு வருகை தந்த அவர் மலர் தூவி அஞ்சலி செலுத்தியதை பொது மக்கள் பார்வையிட்டனர்.

விடுதலைப் புலிகளின் பாதுகாப்புடன் வருகை தந்த அவருடன் செயலர மற்றும் அரச பிரதிநிதிகளும் வந்திருந்தனர். (21)

## உணவு தினத்தையொட்டி பயன்தரு மரநாட்டல்

### இலங்கை வங்கி நடவடிக்கை

ஐ. நா. சபை ஒக்ரோபர் மாதம் 15-ம் திகதியை உலக உணவு தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது. இத்தினத்தில் நமது பிரதேசத்திலும் உணவு உற்பத்தியை பெருக்க மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக உணவுக்குப் பயன்தரும் மரங்களான மா, பலா முதலிய மரங்களை நடுவதற்கு இலங்கை வங்கி தனது சுன்னாகம்,மானிப்பாய், சாவகச்சேரி, பருத்தித்துறை, யாழ்ப்பாணக் கிளைகளின் ஊடாக நடவடிக்கை எடுத்துள்ளது.

அவ்விடங்களில் உள்ள பொது இடங்களிலும் தெரிவு செய்யப்பட்ட சில பள்ளிக்கூடங்களிலும் இன்றும் 17-ம் திகதியும் இந்நிகழ்வு நடைபெறும்.

## இரு வாரங்களில் 40படையினர் பலி

(கொழும்பு)

செப்டம்பர் மாதத்தின் கடைசி இரு வாரங்களிலும் முப்படைகளையும் சேர்ந்த 40க்கும் மேற்பட்டோர் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது-

## மாலை 5 மணிக்கு சென்றடைந்தனர்

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்த அரச தரப்பு குழுவினர் நேற்று பலாலியிலிருந்து புறப்பட்ட விமானம் சரியாக 5-00 மணிக்கு இரத்மலான விமான நிலையத்தில் தரையிறங்கியது. அங்கு பத்திரிகையாளர்களும், பொதுமக்களும் பெருமளவில் திரண்டு நின்று வரவேற்பு தெரிவித்தனர்-

இப்பிரதிநிதிகள் குழு இரத்மலான விமான நிலையத்தில் செய்தியாளர் மாநாடு ஒன்றையும் நேற்று பிற்பகல் நடத்தியது.

### மாணவ தாதியருக்கு

## நேர்முகப்பரீட்சைக் கடிதம் தனிசிங்களத்தில் கிடைத்தது

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 24-ம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள தமிழ் மாணவத் தாதியருக்கான நேர்முகப்பரீட்சைக்குரிய அழைப்புக் கடிதங்கள் தனிச்சிங்களத்தில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன-

மேற்படி நேர்முகப்பரீட்சைக்கான அழைப்புக் கடிதம் யாழ் மாவட்டத்தில் 49 பேருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதனால் அதில் கூறப்பட்ட விடயங்களை விளங்கிக் கொள்ள முடியாதவர்களாக அவர்கள் விழிபிதுங்குகிறார்கள்-

தமிழ் மொழி அரசகரும மொழியாக்கப்பட்டதுவெறும் கண்துடைப்புக்கே போல் தெரிகிறது நடப்பதெல்லாம் தனிச்சிங்களத்தில் என்றால் அரசகரும மொழிச் சட்டம் ஒரு ஏட்டுச் சுரக்காயா? இது தான் புதிய அரசினதும் மொழிக் கொள்கையா என்று பாதிக்கப்பட்ட தேர்வு நாடிகள் சார்பில் குரல்தரவல்ல ஒரு பெற்றார் வினா எழுப்புகிறார்-

## ஜனாதிபதி தேர்தலுக்கு 50 ஆயிரம் பொலிசார்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலின் போது பொலிஸ், ஊர்காவற் படையைச்சேர்ந்த 50 ஆயிரம் பேரை சேவையில் ஈடுபடுத்த பொலிஸ் தலைமையகம் திட்டமிட்டுள்ளது- 48 ஆயிரம் பொலிசாரும் 2000 ஊர்காவற் படையினரும் சேவையில்ஈடுபடுத்தப்படுவர்-

இதேவேளை யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி தேர்தல் வாக்கெடுப்பு நடந்தால் மேலதிக பொலிசார் தேவைப்படுவர் என தேர்தலுக்குப்பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்-

## புலிகள் - அரசபிரதிநிதிகள் இணைந்

## நினைவு கூருகின்றோம்...

### 15. 10. 1994

1985ம் ஆண்டு இதேதினத்தில் மன்னார் - உயிலங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டு எமைப் பிரிந்த

★ **மொசாட்** (ஏகாம்பரம் ராசு - உயிலங்குளம் - மன்னார்)

1986ம் ஆண்டு தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**கார்த்திக்** (குஞ்சுத்தம்பி சுந்தரலிங்கம் - ஆரையம்பதி - 03, மட்டு)

**அலிப் - கேசவன்** (மூத்ததம்பி உதயகுமார் -ஆரையம்பதி 03 - மட்டு)

**சுவீந்திரன்** (இராமநாதன் சந்திரகுமார் - தாண்டவன்வெளி - மட்டு)

**பேதுறு** (சுவாமிநாதன் எட்வேட் - மட்டு)

**மித்திரன்** (வாமதேவன் அகிலன் - பாரதிவீதி - மட்டு)

**சந்திரன்** (நாகலிங்கம் போகானந்தன் - 8ம் வட்டாரம், களுவாஞ்சிக்குடி - மட்டு)

இதே சம்பவத்தில் பலியான நாட்டுப்பற்றாளரான,

**மாப்பிள்ளை** (வல்வெட்டித்துறை)

மன்னார் - பெரியபண்டிவிரிச்சானில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். நாயுடு** (மரியாம்பிள்ளைபத்திநாதன் - சின்னபண்டிவிரிச்சான், மடுக்கோயில் - மன்னார்)

1987ம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய,

★ **சுப்பிரமணியம் சின்னையா** (கதிரவெளி, வாகரை - மட்டு)

மட்டுநகர்ப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**மாத்தையா** (விமலநாதன் - மஞ்சத்தொடுவாய் மட்டு)

யாழ் - கோட்டைப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய

**முகமது - மருத்தீன்** (சந்திரயோகு மருத்தீன் உயிர்த்தராசன் குளம் - மன்னார்)

யாழ் - கோப்பாய் பகுதியில் இந்தியப்படையினரின் எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**முத்து** ( - மலையகம்)

**ஜேம்ஸ்** (இராசையா பாபுகோணேசன்- நுணாவில் சந்தி, சாவகச்சேரி - யாழ்)

கல்லுண்டாய் வெளியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**ஜான்** (நாகநாதன் ராஜாரவி - கைதடிவடக்கு-யாழ்)

1988ம் ஆண்டு இணுவில் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய,

**ரதி** (கந்தசாமி ரதிதரன் - சுதுமலை வடக்கு - யாழ்)

யாழ் - கோண்டாவில் பகுதியில் இந்தியப்படையினர் சூட்டில் வீரச்சாவெய்திய,

**ரவி** (முத்து தவச்செல்வன் - சுதுமலை வடக்கு - யாழ்)

1990-ம் ஆண்டு வவுனியா-செட்டி குளம் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட உழவு இயந்திர விபத்தில் எமைப் பிரிந்த,

**ரியாந்தன்** (கந்தையா சம்பத்-411, வாரிக்குட்டியூர் - வவுனியா)

கள் நடத்தப்பட்டன.

னர். (21)

டுள்ளது.

இதனால் அதில் கூறப்பட்ட விடயங்களை விளங்கிக் கொ

... கள் சார்பில் குரல்தரவல்ல ஒரு பெற்றார் வினா எழுப்புகிறார்-

## கூட்டம்

சண்டிலிப்பாய் - தெல்லிப்பழைக் கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த அதிபர்களுக்கான கூட்டமொன்று எதிர்வரும் திங்கட்கிழமைமுறையே பிற்பகல் 2 30க்கு சண்டிலிப்பாய் கோட்டத்திற்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், தெல்லிப்பழைக் கோட்டத்திற்குபி.பகல் 12 30 மணிக்கு யா/மகாஜனக் கல்லூரியிலும் நடைபெறும் என பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## உணவு தினத்தையொட்டி பயன்தரு மரநாட்டல்

### இலங்கை வங்கி நடவடிக்கை

ஐ. நா. சபை ஒக்ரோபர் மாதம் 15-ம் திகதியை உலக உணவு தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது. இத்தினத்தில் நமது பிரதேசத்திலும் உணவு உற்பத்தியை பெருக்க மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக உணவுக்குப் பயன்தரும் மரங்களான மா, பலா முதலிய மரங்களை நடுவதற்கு இலங்கை வங்கி தனது சுன்னாகம், மானிப்பாய், சாவகச்சேரி, பருத்தித்துறை, யாழ்ப்பாணக் கிளைகளின் ஊடாக நடவடிக்கை எடுத்துள்ளது.

அவ்விடங்களில் உள்ள பொது இடங்களிலும் தெரிவு செய்யப்பட்ட சில பள்ளிக்கூடங்களிலும் இன்றும் 17-ம் திகதியும் இந்நிகழ்வு நடைபெறும்.

## ஜனாதிபதி தேர்தலுக்கு 50 ஆயிரம் பொலிசார்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலின் போது பொலிஸ், ஊர்காவற் படையைச்சேர்ந்த 50 ஆயிரம் பேரை சேவையில் ஈடுபடுத்த பொலிஸ் தலைமையகம் திட்டமிட்டுள்ளது- 48 ஆயிரம் பொலிசாரும் 2000 ஊர்காவற் படையினரும் சேவையில்ஈடுபடுத்தப்படுவர்-

இதேவேளை யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி தேர்தல் வாக்கெடுப்பு நடந்தால் மேலதிக பொலிசார் தேவைப்படுவர் என தேர்தலுக்குப்பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்-


தொழில் நுட்பக் கல்லூரி
மாணவர் அவை நடாத்தும்

மாபெரும் கலை நிகழ்ச்சி

காலம்: இன்று 15-10-94 சனிக்கிழமை
மாலை 6-00 மணி.

இடம்: தொழில் நுட்பக்கல்லூரி மைதானம்

★ அன்றும் இன்றும் என்றும் மங்காப் புகழ்வாய்ந்த பருத்திநகர் தந்த பெருந்திறன் சான்றோன் சாண்டோ M. துரைரத்தினம் அவர்களும் அவரது மாணாக்கரதும் வீரதீர நிருபிப்புகள்.

★ குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் ''எந்தையும் தாயும்'' நாடகம். நெறியாள்கை திரு. க. திலகநாதன்.

★ கலாசேஸ்திரா மாணவிகள் வழங்கும் ''செம்பு நடனம்''

பிறவுண் வீதி,
கொக்குவில்.

மாணவர் அவை

(9690)


## புலிகள் - அரசபிரதிநிதிகள் இணைந்து நடாத்திய பத்திரிகையாளர் மாநாடு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் சிறிலங்கா அரச தரப்பு பிரதிநிதிகளுக்குமிடையேநேற்றுமதியம்பேச்சுவார்த்தை நடந்து முடிவடைந்த பின்னர் இரு தரப்பு பிரதிநிதியினரும் இணைந்து செய்தியாளர் மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

நேற்று பிற்பகல் 2 30மணியளவில் விடுதலைப் புலிகள் அரசியல்துறையினரின் நடுவப்பணியகத்தில் உள்ள மண்டபத்தில் இந்த மாநாடு நடைபெற்றது.

உள்ளூர், வெளியூர் செய்தியாளர்கள் பலர் குவிந்திருந்த இச் செய்தியாளர் மாநாட்டில், பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட இரு தரப்பு பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். விடுதலைப் புலிகளின் தரப்பில் அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் கரிகாலன், தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் டொமினிக், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் ரவி ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

அரச தரப்பில், குழுத்தலைவர் பலபத்த பெண்டி, தகவல் துறை அமைச்சின் செயலாளர் லயனல் பெர்னாண்டோ இலங்கை வங்கித் தலைவர் ஆர். ஆசீர்வாதம், கட்டடக் கலைஞர் என். எல். குணரட்ண ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதலில் அரச தரப்பு பிரதிநிதிகளின் குழுத் தலைவர் பலபத்த பெண்டி அமர்ந்திருந்தபடி தனித்தனியாக விடுதலைப் புலிகளினதும், அரச தரப்பினரதும், மற்றும் இரு தரப்பினரும்இணைந்த கூட்டு அறிக்கைகளையும் வாசித்தார்.

செய்தியாளர்கள் இந்த அறிக்கைகளை பதிவு செய்தும் குறிப்பெடுத்தும் கொண்டனர்.

பின்னர் குழுத் தலைவர் பலபத்த பெண்டி பேச்சுவார்த்தைகளில் இருதரப்பினராலும் பேசப்பட்ட விடயங்கள் பற்றியும் அவை சம்பந்தமான நிலை பற்றியும் தெளிவு படுத்தினார்.

இதனை அடுத்து செய்தியாளர்கள், திரண்டு சூழ்ந்து நின்று தனித்தனியாக ஒவ்வொரு பிரதிநிதிகளிடமும் கேள்விக்கணைதொடுத்தனர்.

ஒவ்வொரு கேள்விகளுக்கும் பிரதிநிதிகள் தெளிவாகப் பதில் அளித்தனர். பிற்பகல் 2.55 மணியளவில் செய்தியாளர் மாநாடு முடிவுற்றது.


★ மாபெரும் இசை விருந்து ★

16-10-1994

நாளை கைலாசபதி கலை அரங்கில்

அபர்ணாலயாவின்

★ புதுவசந்தம் ★

காலை 9 மணி மாலை 4 மணி

நுழைவுச்சீட்டு மண்டப வாயிலில்

(9688)


கொழும்பு செஞ்சிலுவைச் சங்க

## உபதலைவர் பதவிக்கு இரு தமிழர் போட்டி

(யாழ்ப்பாணம்)

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற இலங்கை செஞ்சிலுவைச் சங்க நிர்வாக தெரிவில் உபதலைவர் பதவிக்கு இருவர் போட்டியிட்டனர் என தெரியவருகிறது.

கடந்த முதலாம் திகதி இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமைச் செயலகத்தில் அதன் நிர்வாக தெரிவு இடம்பெற்றது. அதில் உப தலைவர் பதவிக்கு கிளிநொச்சி கிளையைச் சேர்ந்த கே. சிவராஜலிங்கமும் கரவெட்டி கிளையைச் சேர்ந்த யே. யி. ராஜேந்திரமும் போட்டியிட்டனர். இதில் கே. சிவராஜலிங்கம் வெற்றிபெற்றார். ஏனையவை சிங்கள பிரதிநிதிகள் மத்தியில் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டது.

தமிழ் பிரதிநிதிக்கு என ஒதுக்கப்பட்ட ஒரு இடத்திற்கே போட்டி ஏற்பட்டது என இலங்கை செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. (இ)


உயர்த்தராசன் குளம் - மன்னார்)
யாழ் - கோப்பாய் பகுதியில் இந்தியப்படையினரின் எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**முத்து** ( - மலையகம்)

**ஜேம்ஸ்** (இராசையா பாபுகோணேசன்- நுணாவில் சந்தி, சாவகச்சேரி - யாழ்)
கல்லுண்டாய் வெளியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**ஜான்** (நாகநாதன் ராஜாரவி - கைதடிவடக்கு-யாழ்)
1988ம் ஆண்டு இணுவில் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய,

**ரதி** (கந்தசாமி ரதிதரன் - சுதுமலை வடக்கு - யாழ்)
யாழ் - கோண்டாவில் பகுதியில் இந்தியப்படையினர் சுட்டதில் வீரச்சாவெய்திய,

**ரவி** (முத்து தவச்செல்வன் - சுதுமலை வடக்கு - யாழ்)
1990-ம் ஆண்டு வவுனியா-செட்டி குளம் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட உழவு இயந்திர விபத்தில் எமைப் பிரிந்த,

**ரியாந்தன்** (கந்தையா சம்பத்-411, வாரிக்குட்டியூர் - வவுனியா)
1991-ம் ஆண்டு மணலாறு-கொக்குத்தொடுவாயில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். மைலி** (கிருஷ்ணகுமார் ஏரம்பு-கொக்குத்தொடுவாய்-மணலாறு)
சாவகச்சேரிப் பகுதியில் சிறிலங்கா விமானப் படையினர் உலங்குவானூர்தியிலிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய,

**மேஜர் சிறிமாஸ்ரர்** (கனகரத்தினம் சிறிதரன்-புத்தூர் மேற்கு-யாழ்)
1992-ம் ஆண்டு மட்டு-அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். இமையவன் - றொபேட்** (குமாரநாயகம் அருமைநாயகம்-விநாயகபுரம்-அம்பாறை)

**வசந்தன்** (மாணிக்கம் சுரேஸ்குமார்-பாண்டிருப்பு அம்பாறை)

**லெப். குகன்** (வேலுப்பிள்ளை கமலேஸ்வரன்-வாழைச்சேனை-மட்டு)

**2 ம் லெப். சத்தியநாதன் - கோவிந்தன்** (பத்திநாதன் தம்பிராசா-மட்டு)

**இராமச்சந்திரன்** (ஞானச்செல்வம்செல்வரத்தினம் -கிரான்-மட்டு)

**இனியவன் - நெல்சன்** (நடராசா சந்திரகுமார் பெரியநீலாவணை-மட்டு)

**வீதன்** (வீரபத்திரன் சிவானந்தராசா-சந்திவெளி -மட்டு)
1993-ம் ஆண்டு கடற்பயிற்சியின்போது ஏற்பட்ட தவறுதலான விபத்தில் எமைப்பிரிந்த,

**கப்டன் பைரவன்** (சந்திரகாந்தன் வாசிசன்-மாணிக்கவாசகர் வீதி-திருமலை)
யாழ் மாவட்டத்தில் சுகயீனம் காரணமாக எமைப் பிரிந்த,

**கணேஸ்** (அந்தோனிப்பிள்ளை ஆனந்தராசா-3ம் வட்டாரம், லேக்வீதி-மட்டு)
இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் சிறிலங்காப் படையினராலும் இந்தியப் படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொது மக்கள்,

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்ட வராவார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி10513)

# வெள்ளி ஆண்டில் வெள்ளைப்பிரம்பு...

15-10-1994 உலகம் முழுவதுமுள்ள விழிப்புல வலுவிழந்தவர்களுக்கு இன்று ஓர் உன்னத நாள். வீடுகளில் முடங்கி விடாது வெளியுலகுடன் எம்மை இணைத்து நிற்கும் வெள்ளைப் பிரம்பிற்கு இன்று சர்வதேச ரீதியாக விழா எடுக்கிறார்கள் இந்தச் சர்வதேச தினத்தில் விழிப்புல வலுவிழந்தவர்களாகிய நாங்களும் எங்கள் இருப்பை உலகத்துக்கு உறுதிப்படுத்திக் கொள்வோம்.

'வெள்ளைப் பிரம்பு பார்வையற்றவர்களுக்கு ஒரு பாதுகாப்பு அது அவர்களை அடையாளப்படுத்தும் சின்னம்' என்று சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு இன்றுடன் 25 ஆண்டுகள் பூர்த்தியாகின்றது. இவ்வேளையில் இதை அறிமுகப்படுத்திய அமெரிக்க அரிமாக் கழகத்தை (LIONS CLUB) நாம் நன்றியோடு நினைவு கூருகின்றோம்.

புராணங்களைப் புரட்டிப் பார்க்கின்றோம். சந்தர்ப்பவசத்தால் பார்வையிழந்த சுந்தரர்களையும், திருதராஷ்டிரர்களையும் ஏன் எங்கள் சரித்திர மூதாதைகளான யாழ்பாடிகளையும் கூட சந்திக்கிறோம் மேற்குலகைச் சற்றும் திரும்பிப்பார்க்கிறோம் ஹெலன் கெல்லர்களும், தௌலத்களும், மாபெரும்

## வாழ்வகம் வாழ்த்துகிறது

சர்வதேசங்களிலுமுள்ள விழிப்புல வலுவிழந்தோருக்குப் வெள்ளைப்பிரம்பு தினமாகிய இந்நன்னாளில் வாழ்வகத்தில் வதியும் விழிப்புல வலுவிழந்தோர் வாழ்த்துக் கூறுவதில் மகிழ்கின்றனர்.

கவிஞரான ஜோன் மில்ரன்களும் எங்களுக்குத் தென்படுகிறார்கள்.

எங்கள் தமிழீழத்தில் மட்டும் இவர்களது ஆற்றல்கள் வெளிவரவில்லை? என்ற கேள்வி இன்று காலாவதியாகி விட்டது. தமிழீழமும் சத்தம் இல்லாமல் சிலசாதனையாளர்களை உருவாக்கிக் கொண்டுதான் இருக்கிறது. வாழ்வகம் அதற்கு ஒரு சான்று

எனவே வரலாற்றுப் புனிதம் மிக்க இந்த உன்னதமான நாளிலே விழிப்புல வலுவிழந்தவர்களாகிய நாங்கள் ஒரு சபதம் எடுத்துக் கொள்வோம். பார்வையற்றோராகிய நாங்கள் பூமிப்பந்தைச் சுற்றி எங்கள் கைகளைக் கோர்த்துக் கொள்வோம். ஒருவருக்கொருவர் வாழ்த்துக் கூறிக் கொள்வோம். கூட்டுப் புழுக்களாக அறைகளுக்குள் முடங்கிக் கிடந்த நாங்கள் வண்ணாத்திப் பூச்சிகளாக சிறகை விரித்துக் கொள்வோம். எங்களுடைய இலட்சியப் பாதையை நாங்களே செப்பனிட்டுக் கொள்வோம். வெள்ளைப் பிரம்பு எங்களுக்கு வழிகாட்டட்டும்.

நன்றி

அறைகூவல்:

விழிப்புல வலுவிழந்தோர்
வாழ்வகம்,
சுவாமி ஞானப்பிரகாசர்
வீதி,
மல்வம், உடுவில்.

## கமக்காரர் அறிமுக அட்டை மீளப்புதுப்பித்தல்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ள கமக்காரர் அறிமுக அட்டைகள் யாவும் 1995-ம் ஆண்டின் பயன்பாட்டிற்கென இம்மாதம் 15-ம் திகதி முதல் நவம்பர் மாதம் 15-ம் திகதி வரை மீளபுதுப்பிக்கப்படவுள்ளன. இவ்வேலைகள் அனைத்தும் ஒவ்வொரு கிராமிய உற்பத்திக் குழுப் பகுதி ரீதியாக அவ்வப் பிரதேச பதிவாளர்களால் மேற்கொள்ளப்படும்.

மேலும் பயிர் செய்கைக்குட் படுத்தப்படும் காணிகளை இதுவரை பதிவு செய்து அட்டை பெற்றுக்கொள்ளாத செய்கையாளர்கள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்கும் முன்னர் காணிகளைப் பதிவு செய்து அட்டையைப் பெற்றுக் கொள்ளவும் அல்லாத சந்தர்ப்பத்தில அதற்கான குற்றப்பணம் செலுத்த வேண்டி நேரிடும் உள்ளீடு விநியோகங்கள் அனைத்தும் கமக்காரர் அறிமுக அட்டைக்கு ஊடாக மேற்கொள்ள ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பதால் கமக்காரர் அறிமுக அட்டை பெற்றுக் கொண்ட அனைத்துச் செய்கையாளரும் தமது அட்டைகளை மீளப் புதுப்பித்துக் கொள்ளுமாறு காணிகளைப் பதிவு செய்து அட்டைகளைப் பெறாதுள்ள செய்கையாளர்கள் தமது காணிகளை உடன் பதிவு செய்து அட்டை பெற்றுக் கொள்ளுமாறும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக் கொள்கின்றது.

# பாடசாலை மாணவர்களை வைபவங்களுக்கு அனுப்ப வேண்டாம்

றிச்சர்ட் பத்திரான

(கொழும்பு)

அரசியல்வாதிகள் கலந்து கொள்ளும் வைபவங்களில் கலந்து கொள்வதற்காக பாடசாலை மாணவர்கள் மற்றும் மாணவிகளை அனுப்பி வைப்பதை உடனடியாக நிறுத்தும்படி கல்வி உயர் கல்வி அமைச்சு சகல பாடசாலை அதிபர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சு அனுப்பியுள்ள சுற்று நிருபம் ஒன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது பாடசாலைகளுக்கு அப்பால் அரசியல்வாதிகள் கலந்து கொள்ளும் வைபவங்களுக்காக மாணவ மாணவிகள் அனுப்பி வைக்கப்படுவதால் அவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்படுகிறது. எவ்வாறாயினும் பாடசாலையில் நடைபெறும் வைபவமொன்றில் அரசியல்வாதிகள் கலந்து கொள்ளும் போது மாணவ மாணவிகள் கலந்து கொள்வதில் சர்ச்சைகள் இருக்காது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 50 வீத மாணவர்கள் பல் வியாதியால் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வேலணை சைவப் பிரகாச வித்தியாலயத்தைச் சேர்ந்த சுமார் 95 மாணவ மாணவியர் அண்மையில் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர் இவர்களில் 57 பேர் பல் வியாதியினாலும், 2 பேர் கண் பார்வைக் குறைவினாலும். ஒருவர் தோல் வியாதியினாலும் பாதிக்கப் பட்டிருப்பதாக இப் பரிசோதனையை மேற்கொண்ட பாடசாலை வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த வைத்திய அதிகாரிகளினால் அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. பிரஸ்தாப மாணவர்களுக்கான சிகிச்சை யாழ் போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் என்றும், 1-ம், 4-ம், 7-ம் ஆண்டுகளைச் சேர்ந்த மாணவர்களே மேற்படி பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டதாகவும் வித்தியாலய வட்டாரங்கள் தெரிவித்தனர் (22)

## மாதிரி வீடமைப்பு திட்டம் திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

தீவக மக்கள் தங்கியுள்ள கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் தமிழர்புனர் வாழ்வுக் கழகத்தினால் அமைக்கப்பட்ட மாதிரி வீடமைப்புத் திட்டம் - 1-ன் 'திறப்பு விழா' சென்ற செவ்வாய்க்கிழமை வெகு விமரிசையாக நடைபெற்றது. தமிழர் புனர் வாழ்வுக் கழகச் செயலாளர் திரு க.இலங்கேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் மங்கள விளக்கினை குடியிருப்புப் பொறுப்பாளர் திரு அற்புதன் ஏற்றி வைத்தார். தேசியக் கொடியை யாழ் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு சி. இளம்பரிதி அவர்கள் ஏற்றி வைத்தார். தொடர்ந்து வீடமைப்புத் திட்ட பெயர்ப்பலகையை குடியிருப்புப் பாடசாலை அதிபர் திரு செ. சண்முகவடிவேல் திரை நீக்கம் செய்து வைக்க விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு வே. பாலகுமாரன் அவர்கள் வைபவ ரீதியாக வீடமைப்புத் திட்டத்தை திறந்து வைத்தார் இதையடுத்து இங்கு புதிதாக அமைக்கப்பட்ட வீர வேங்கை கரிகாலன் சனசமூக நிலையம், போசாக்கு புனர் வாழ்வு நிலையம் என்பவற்றை தென்மராட்சிக் கோட்ட அரசியற் துணைப்பொறுப்பாளர் திரு. கலைவாணன் அவர்களும், மருத்துவ நிலையத்தை தீவகக் கோட்ட மகளிர் அமைப்பின் குடியிருப்புப் பொறுப்பாளர் செல்வி கலைமதி அவர்களும், தையல் பயிற்சி நிலையத்தை திரு. சி. இளம்பரிதி அவர்களும் வைபவ ரீதியாக திறந்து வைத்தனர். தொடர்ந்து மதியமளவில் பொதுக் கூட்டமும், மாலையில் இல்ல விளையாட்டுப் போட்டியும் நடைபெற்றன குடியிருப்புப் பொறுப்பாளர் திரு. அற்புதன் நன்றியுரை தெரிவித்தார். (22)

## படையினர் பிணையில் விடுதலை

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டிய பாடசாலை மாணவர்கள் 31 பேர் காணாமற் போனது தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்ட ஆயுதப்படைகளைச் சேர்ந்த ஆறுபேர் தற்காலிக பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதற்கான அனுமதியை இவ் வழக்கை விசாரிக்கும் நீதி மன்றம் வழங்கியுள்ளது.

## கற்கை வட்டம்

(தென்மராட்சி)

தென்மராட்சி தொலைக் கல்வி ஆங்கில பயிலுனர் ஆசிரியர்களுக்கான ஒரு நாள் கற்கைவட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமையன்று இடம் பெறவுள்ளது. இதில் கலந்து கொள்வதற்கு சம்பந்தப்பட்ட பயிற்சியாளர்களும் போதனாசிரியர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர் (86)

## மூக்கு கண்ணாடி

தென்மராட்சிப் பகுதியில் கண் பார்வை குறைந்தவர்களுக்கு கண் பரிசோதனை ஒன்று கடந்த 9-10-94 அன்று சாவகச்சேரி மருத்துவமனையில் இடம் பெற்றது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் தொடர்ந்து நடாத்தப்பட்டுவரும் இப் பரிசோதனையில் அன்றைய தினம் 250 பேருக்கு கண் பரிசோதித்து இதில் 16 பேருக்கு கண் வெண்விழிப் படல சத்திரச் சிகிச்சை (கற்றாக் ஒப்றேசன்) செய்வதற்கு தெரிவு செய்யப் பட்டனர் மிகுதி 234 பேருக்கும் இலவச மூக்கு கண்ணாடி வழங்கப்படவுள்ளது. இவ் லயன்ஸ் கழகத்தின் இச் சேவையானது வறிய மக்கள் மேற்படி சிகிச்சையினை பணம் கொடுத்து சிரமப்பட்டு செய்ய வேண்டிய நேரத்தில் முன்வந்து செய்வது மிகவும் நோயாளிகளின் கஷ்டத்தினை தணிப்பதாகவே இருக்கும்- (86)

## ஆயுதம் வழங்கியமைக்கு சரியான ஆவணம் இல்லை

(கொழும்பு)

அரசியல் கட்சிகள் மற்றும் உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக கடந்த 1988 முதல் 1990 ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்ட சுமார் ஐயாயிரத்துக்கும் அதிகமான துப்பாக்கிகள் இன்னமும் மீள ஒப்படைக்கப்படவில்லை.

இவற்றை மீளப்பெற பொலிசார் மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக இதுவரை நூறு ஆயுதங்கள் மட்டுமே மீட்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

மேலும் இந்த ஆயுதங்கள் பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டவை. எனினும் இது தொடர்பாக சரியான ஆவணங்கள் எதுவும் இல்லை எனவும் இதனால் இவ் ஆயுதங்களை மீட்பது கடினமானதாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

## தமிழ் இன்பக்கண்காட்சி யாழ் இந்துவில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்துக் கல்லூரியில் இன்று காலை ஒன்பது மணி முதல் தமிழ் இன்பக் கண்காட்சி நடைபெறஏற்பாடாகியுள்ளது

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை- இரத்தினதுரை, தலைமையில் நடைபெறும் ஆரம்ப விழாவில் வைத்திய கலாநிதி கணேசரட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதி தேசிய கொடியை ஏற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளார்-

ஞாயிறன்று நடைபெறும் இரண்டாம் நாள் நிகழ்வில் தற்கால விமர்சனக் கொள்கைகள் பற்றி கலாநிதி சோ. கிருஷ்ணராசா உரை நிகழ்த்தவுள்ளார்- பிற்பகலில் கலைஞர் வேல் ஆனந்தன் குழுவினரின் நடன அரங்கும் இடம் பெறும்-

சனிக்கிழமை முதல் எதிர் வரும் செவ்வாய் வரை இடம் பெறும் இக் கண்காட்சியில் கருத்தரங்கமும், கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளன-

## முற்றிலும் புதிய பாணியில் தேர்தல்பிரசாரம் செய்வேன்

- ஏ. ஜே. ரணசிங்க

(கொழும்பு)

முற்றிலும் புதிய பாணியிலான தேர்தல் பிரசார முறை ஒன்றையே இம்முறை ஜனாதிபதி தேர்தலின் போது

பஸ்களிலும், சினிமாக் கொட்டகைகளிலும் மக்கள் என்னைப் பற்றி பேசுவார்கள். எனது கொள்கைகள் பற்றி விவாதிப்பார்கள்.

## பிரெஞ்சு எயர் பஸ் கோல்வனவில் எவருக்கும் தரகு கொடுக்கவில்லை

## மண்ணெய் பெற சங்கங்கள் பின்னடிப்பு

உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக கடந்த 1988 முதல் 1990 ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்ட சுமார் ஐயாயிரத்துக்கும் அதிகமான துப்பாக்கிகள் இன்னமும் மீள ஒப்படைக்கப்படவில்லை.

இவற்றை மீளப்பெற பொலிசார் மேற்கொண்ட முயற்சி மீட்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

மேலும் இந்த ஆயுதங்கள் பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டவை. எனினும் இது தொடர்பாக சரியான ஆவணங்கள் எதுவும் இல்லை எனவும் இதனால் இவ் ஆயுதங்களை மீட்பது கடினமானதாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இன்று காலை ஒன்பது மணி முதல் தமிழ் இன்பக் கண்காட்சி நடைபெறஏற்பாடாகியுள்ளது

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை- இரத்தினதுரை, தலைமையில் நடைபெறும் ஆரம்ப விழாவில் வைத்திய கலாநிதி கணேசரட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதி தேசிய கொடியை ஏற்றி

இரண்டாம் நாள் நிகழ்வில் தற்கால விமர்சனக் கொள்கைகள் பற்றி கலாநிதி சோ. கிருஷ்ணராசா உரை நிகழ்த்தவுள்ளார்- பிற்பகலில் கலைஞர் வேல் ஆனந்தன் குழுவினரின் நடன அரங்கும் இடம்பெறும்-

சனிக்கிழமை முதல் எதிர்வரும் செவ்வாய் வரை இடம்பெறும் இக்கண்காட்சியில் கருத்தரங்கமும், கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளன-

திரு க.இலங்கேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் மங்கள விளக்கினை குடியிருப்புப் பொறுப்பாளர் திரு அற்புதன் ஏற்றி வைத்தார். தேசியக் கொடியை யாழ் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு சி. இளம்பரிதி அவர்கள் ஏற்றி வைத்தார். தொடர்ந்து வீடமைப்புத் திட்ட பெயர்ப்பலகையை குடியிருப்புப் பாடசாலை அதிபர் திரு செ. சண்முகவடிவேல் திரை நீக்கம்

அரசியற் துணைப்பொறுப்பாளர் திரு. கலைவாணன் அவர்களும், மருத்துவ நிலையத்தை தீவகக் கோட்ட மகளிர் அமைப்பின் குடியிருப்புப் பொறுப்பாளர் செல்வி கலைமதி அவர்களும், தையல் பயிற்சி நிலையத்தை திரு. சி. இளம்பரிதி அவர்களும் வைபவ ரீதியாக திறந்து வைத்தனர்- தொடர்ந்து மதியமளவில் பொதுக் கூட்டமும், மாலையில் இல்ல விளையாட்டுப் போட்டியும் நடைபெற்றன குடியிருப்புப் பொறுப்பாளர் திரு. அற்புதன் நன்றியுரை தெரிவித்தார். (22)

250 பேருக்கு கண் பரிசோதித்து இதில் 16 பேருக்கு கண் வெண்விழிப் படல சத்திரச் சிகிச்சை (கற்றாக் ஒப்றேசன்) செய்வதற்கு தெரிவு செய்யப்பட்டனர் மிகுதி 234 பேருக்கும் இலவச மூக்கு கண்ணாடி வழங்கப்படவுள்ளது. இவ் லயன்ஸ் கழகத்தின் இச் சேவையானது வறிய மக்கள் மேற்படி சிகிச்சையினை பணம் கொடுத்து சிரமப்பட்டு செய்ய வேண்டிய நேரத்தில் முன்வந்து செய்வது மிகவும் நோயாளிகளின் கஷ்டத்தினை தணிப்பதாகவே இருக்கும்- (86)

# முற்றிலும் புதிய பாணியில் தேர்தல்பிரசாரம் செய்வேன்

- ஏ. ஜே. ரணசிங்க

(கொழும்பு)

முற்றிலும் புதிய பாணியிலான தேர்தல் பிரசார முறை ஒன்றையே இம்முறை ஜனாதிபதி தேர்தலின் போது கடைப்பிடிக்கப் போவதாக ஜனாதிபதி தேர்தலில் சுயேட்சையாக போட்டியிடும் ஏ. ஜே. ரணசிங்க கூறியுள்ளார்.

தேர்தல் பிரசார உத்தி பற்றி அவர் செய்தியாளர் ஒருவரிடம் மேலும் விளக்குகையில், கூட்டம் இருக்காது போஸ்டர்கள் இருக்காது. மாலை, மரியாதைகள் இருக்காது, மக்கள் கூடும் இடங்களில் பிரசாரங்கள் நடக்கும் வேலைத்தளங்களிலும், பஸ்களிலும், சினிமாக் கொட்டகைகளிலும் மக்கள் என்னைப் பற்றி பேசுவார்கள். எனது கொள்கைகள் பற்றி விவாதிப்பார்கள்.

திரண்ட வாக்குகள் என்பதும், மிதப்பு வாக்குகள் என்பதும் இருந்த காலம் இப்பொழுது மாறிவிட்டது மக்கள் இப்போது அறிவிலும், அனுபவத்திலும், வளர்ச்சி அடைந்து விட்டனர். இவர்களுக்கு கூட்டங்கள் நடத்துவதன் மூலமோ பாடகர்களை வரவழைப்பதன் மூலமோ வெடி கொழுத்துவதன் மூலமோ மக்களை இப்போது ஏமாற்ற முடியாது எனவும் தெரிவித்தார்.

# காணி விற்பனையில் மோசடி நுவரெலிய மேயருக்கு ஆட்சேபம்

(கொழும்பு)

நகர அபிவிருத்தி சபைக்கு சொந்தமான காணியை நுவரெலிய மேயர் குறிப்பிட்ட சிலருக்கு இரகசியமாக மதிப்பீட்டு விலையிலும் பார்க்க மிகவும் குறைவான விலைக்கு விற்றுவிட்டு பின்னர் அதற்கான அனுமதியைப் பெற முயற்சித்து இருக்கிறார். ஆனால் இதுபற்றி நகர அபிவிருத்தி சபைக்குத் தெரிய வந்ததையடுத்து மேற்படி காணியை நகர அபிவிருத்திச் சபை மீண்டும் பொறுப்பேற்றிருக்கிறது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது, தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு சொந்தமான மூன்று ஏக்கர் காணியை நகர அபிவிருத்தி சபை பணம் கொடுத்துப் பெற்றிருந்தது; அக்காணியைப் பொறுப்பேற்ற நுவரெலிய மாநகரசபை, நகர அபிவிருத்தி சபையின் அனுமதியின்றி எவ்வித அபிவிருத்தியும் செய்ய முடியாதென கடந்த 1992-ல் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. இக்காணியை மாநகர மேயர் 31 பேருக்கு ஒரு பேர்ச் நிலம் 40 ஆயிரம் ரூபா வீதம் தலா 15 பேர்ச் காணி கொடுப்பதற்காக மாநகர சபையினதும், அதற்குப் பொறுப்பான அமைச்சரினதும், அனுமதி கோருவதற்காக கடந்த மாநகரசபை கூட்டத்தில் யோசனை தெரிவித்து இருந்தார்.

எனினும் நுவரெலியா நகரில் ஒரு பேர்ச் நிலம் இப்போது 75 ஆயிரம் ரூபா வரை விற்பனையாகிறது. மேயரின் செயலுக்கு சுதந்திர கட்சி உறுப்பினர் தயானந்த சிறிபாலா ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

## கலைநிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி லவனிதா குடியிருப்பில் இயங்கும் சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்காவின் மாதாந்த 'கலை நிகழ்வும் கூட்டமும்' இன்று சனிக்கிழமை இரவு பூங்கா அரங்கில் நடைபெறும். விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் மற்றும் பூங்கா நிர்வாகத்தினர் ஆகியோரின் சிறப்புரைகளுடன் பூங்கா சிறார்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும், (22)

# பிரெஞ்சு எயர் பஸ் கோர்வனவில் எவருக்கும் தரகு கொடுக்கவில்லை

-பராபரா கிராச்ட்

(கொழும்பு)

பிரான்ஸ் நாட்டை சேர்ந்த எயர் பஸ் நிறுவனத்துடனான விமானக் கொள்வனவில் எவருக்கும் தரகுப்பணம் எதுவும் வழங்கப்படவில்லை. எயர் பஸ் நிறுவனத்திற்கும் எயர்லங்கா நிறுவனத்திற்கும் இடையிலான உடன்படிக்கை அப்பழுக்கற்றதாகும். இவ்வாறு எயர் பஸ் நிறுவனத்தை சேர்ந்த பத்திரிகை தகவல் சேவை பொது முகாமையாளர் பராபரா கிராச்ட் தெரிவித்தார்

பிரான்ஸின் இரண்டாவது பெரிய நகரமான துலுசில் இயங்குகின்ற எயர் பஸ் நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் இலங்கை பத்திரிகையாளர்களுடனான சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் எயர் பஸ் நிறுவனத்திடமிருந்து ஏ-340 ரக விமானங்கள் பெறுவது தொடர்பான உடன்படிக்கை பற்றி சர்ச்சை நிலவுகின்றது. ஆனால் அது உண்மையல்ல எனவும் தெரிவித்தார்:

துலுசு நகரில் இருந்து கடந்த 7ம திகதியன்று பயணத்தை ஆரம்பித்த எயர் பஸ்சில் இலங்கைப் பத்திரிகையாளர்களும் அங்கிருந்து புறப்பட்டு கட்டுநாயக்காவை வந்தடைந்தனர்.

# 72 மணி நேரத்தில் 10 வன்முறை சம்பவங்கள்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலுக்கான நியமனம் பத்திரங்கள் தாக்கல் செய்த பின்னர் 72 மணி நேரத்தில் பத்து வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றதாக பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் முதலாவது சம்பவம் பிலியந்தலை பீங்கான் கூட்டுத்தாபன வளவில் ஜாதிக சேவக சங்கமயவினால் போடப்பட்டிருந்த கொடிகள் அகற்றப்பட்டதை தொடர்ந்து இரண்டு தொழிற்சங்கங்களின் ஆதரவாளர்களுக்கிடையே மோதல்கள் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது

## வாக்காளர் அட்டை அனுப்பப்படும்

ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் இம் மாதம் 24ம் திகதி முதல் வாக்காளர்களுக்கு அனுப்பப்பட இருப்பதாக தேர்தல் ஆணையாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

## கல்லுண்டாயில் ஆரம்பம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் கற்பகச் சோலை திட்டத்தில் ஒரு நடவடிக்கையாக 30,000 பனை விதை நடுகைத்திட்டம் ஒன்று கடந்த 3ம் திகதி கல்லுண்டாய் உப்பளத்தை அண்டிய பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒரு கோடிக்கு மேற்பட்ட பனை வளத்தைக் கொண்ட தமிழீழத்தின் பனை வளத்தை 2000 ம் ஆண்டளவில் இரட்டிப்பாக்கும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் கற்பகச்சோலைத் திட்டத்தின் கீழ் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் இச் செயற்பாட்டை மேலும் பல இடங்களில் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 'வீடு' வெளியீட்டு விழா

இளையவனின் 'வீடு' வெளியீட்டுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. சு. ரவி தலைமை தாங்கவுள்ளார். விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை வாழ்த்துரை நிகழ்த்துவார். கலாநிதி. அ. சண்முகதாஸ் வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

தமிழீழ விடுதலைப் புலிகளைச் சேர்ந்த திரு வே. பாலகுமாரன் நூலை வெளியிட்டு வைப்பார்.

க. சட்டநாதன், த. கலாமணி ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

இறுதியில் நூலாசிரியர் நன்றியுரை வழங்குவார்,

## கண்டெடுப்பு

கிளாலி, நல்லூர்க் கடற்கரையில் மூக்குக் கண்ணாடி ஒன்று கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.

# மண்ணெய் பெற சங்கங்கள் பின்னடிப்பு

(யாழ்ப்பாணம்)

ப. நோ. கூ. சங்கங்களில் நிதி பற்றாக்குறை காரணமாக மண்எண்ணெய் எடுப்பது தாமதமாவதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ் செயலக புனர்வாழ்வு பகுதியினால் குடாநாட்டு மக்களிற்கு வழங்கப்படும் பங்கீட்டு மண்ணெண்ணெயின் 18 வது சுற்று தற்பொழுது விநியோகிக்கப்பட்டு வருகிறது

இம் மண் எண்ணெயை செயலகத்திலிருந்து ப நோ கூ சங்கங்கள் பெற்று மக்களிற்கு விநியோகிப்பதில் சில பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நிதிப் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளன இந்த நிதி பற்றாக்குறை காரணமாகவே மண் எண்ணெயை பெற்று விநியோகிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக ப நோ கூ சங்க வட்டாரங்களில் இருந்து தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுது பொது மக்கள் மண்எண்ணெயை விரைவில் பெற்றுக் கொள்ளாததால் மண்எண்ணெயில் பெருமளவு நிதி முடங்க வேண்டி ஏற்படுகிறது. என மேலும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

# ஆசிரிய விபரங்களை திரட்ட திட்டம்

திங்கட்கிழமை யாழ் கல்வித் திணைக்கள முகாமைத்துவ நிலையத்தில் நடைபெற உள்ள யாழ் நல்லூர்க் கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள் கலந்துகொள்ள உள்ள கூட்டத்தில் ஆண்டு 5-ல் தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம் சமயம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் விபரங்களையும் ஆண்டு 8-ல் தமிழ் கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி ஆங்கிலம சமயம் சித்திரம் சங்கீதம் நடனம், வாழ்க்கைத் திறன் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் பெயர் விபரங்களையும் தம்மிடம் சமர்பிக்குமாறு யாழ் நல்லூர்க் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. புலேந்திரன் சகல பாடசாலை அதிபர்களையும் கேட்டுள்ளார்

இவர்களுக்கான கூட்டம் 17 10-94 திங்கட்கிழமை பி ப 3-00 மணி தொடக்கம் நடைபெற உள்ளது- (17)

## மண்ணெய் உடன் பெறவும்

(யாழ்ப்பாணம்)

தற்போது விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் 18-வது சுற்று மண்ணெண்ணையை பெற்றுக் கொள்ளாத பல நோ. கூ. சங்கங்கள் உடன் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். செயலக புனர் வாழ்வுப்பகுதியினர் கேட்டுள்ளனர். (இ)

## பப்பாசிச்சட்னி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உணவு பதனிடப் பகுதியினர் கிட்டு 92 பப்பாசிப் பழத்திலிருந்து பரீட்சார்த்தமாகப் பப்பாசிப் பழச்சட்னி தயாரித்துள்ளனர் மிகவும் சுவை நிறைந்த இந்தச்சட்னி, சோறு இடியப்பம், பிட்டு ஆகிய உணவுகளுடன் சேர்த்துக்கொள்வதற்குச் சிறந்ததாகும்.

இத் தயாரிப்பு வெற்றியளித்ததன் மூலம்நாடெங்கிலும் கிட்டு 92 பப்பாசிப் பழச்செய்கை ஊக்குவிக்கப் படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும் பயிற்சி

## பேச்சுகள் குறித்து ஜோர்ஜ் ஆர்னி

ஆரம்ப சுற்று பேச்சுகளில் பெரும் முன்னேற்றம் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது. இது ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் பயிற்சி, சரியான பேச்சுகள் நடக்கும் முறை மற்றும் ஏனைய விவகாரங்கள் குறித்து கலந்துரையாடும் ஒரு களமாக இது உள்ளது. என பி. பி. சியின் கொழும்பு செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி கருத்து தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், விடுதலைப் புலிகள் போர் நிறுத்தம் குறித்து ஆரம்ப சுற்று பேச்சுகளில் அதிகம் வலியுறுத்தாதது வியப்பாக உள்ளது. போர் நிறுத்தம் மற்றும் வடக்கில் உள்ள இராணுவ முகாம் ஒன்று மூடப்படுதல் பொருளாதார தடை முற்றாக நீக்கம் போன்ற விடயங்களை புலிகள் வலியுறுத்துவர் என எதிர்பார்க்கப்படுகிறது. பேரம் பேசும் அதிகாரம் இந்த அரச பிரதிநிதிகள் குழுவுக்கு இல்லை புதிய அரசு சமாதானத் தீர்வு காண உண்மையாகவே முயல்கின்றது என்பதை வலியுறுத்துவதே இக் குழுவின் நோக்கம்.

குழுவினர் அரசிடமிருந்து ஒரு கோரிக்கையையும் எடுத்துச் சென்றுள்ளனர். வக்கிலும் ஜன திபதி வாக்களிப்பு இடம்பெற புலிகள் அனுமதிக்க வேண்டும் என்பதே இக் கோரிக்கை என்றும் பி பி சி. செய்தியாளர் குறிப்பிட்டார்.

# யாழ். செஞ்சிலுவைக்கு நிதிப் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளையில் நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து ஊழியர்களிற்கு சம்பளம் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் செஞ்சிலுவைச் சங்கத்தினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களும் பாதிக்கப்படும் நிலை தோன்றியுள்ளது. இதனைத் தொடர்ந்து கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட துவிச்சக்கர வண்டிகளை விற்பனைசெய்து பெறப்பட்ட பணத்தில் ஊழியர்களிற்கு சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ்-கிளையின் உயர் அதிகாரிகள் கொழும்பில உள்ள தமது தலைமை அலுவலகத்திற்கு பலமுறை தெரியபடுத்தியும் அவர்கள் இதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்-கிளை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ)

# லக்சபான மின்வழங்க 17 மில். ரூபா தேவைப்படும்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் 33கே.வி திறன்கொண்ட லக்சபானாமின்சாரத்தை வழங்குவதற்கான திருத்த வேலைகளுக்கு பதினேழு மில்லியன் ரூபா வரையில் தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தகவலை இலங்கை மின்சார சபையின் தலைவர் வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் 33 கே.வி மின்சாரத்தை சுமந்து வரும் இரும்புக் கோபுரங்களில் 63 காணாமற் போய் விட்டதாகவும் 49 சேதமாகி இருப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் தரைவழிப் பாதையொன்று திறக்கப்பட்டதும், 72 மணி நேரத்தில் சில மின் பிறப்பாக்கிகள் அனுப்பப்பட்டு யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளுக்கு மின் வசதி செய்து கொடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

# வெளிநாட்டு உதவியில் சுமார் 40 வீதம் மோசடி

மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்கென வெளிநாடுகளிலிருந்து ... மத்தியில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில். ...

# 8-வது தமிழாராய்ச்சி மாநாட்டை பிரதமர், ஜனாதிபதி புறக்கணிக்குக

## -தமிழக எதிர்க்கட்சிகள் கோரிக்கை

(சென்னை)

எட்டாவது தமிழாராய்ச்சி மாநாட்டை, இந்தியாவின் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள சர்மா, மற்றும் பிரதமர் நரசிம்மராவ் ஆகியோர் புறக்கணிப்பு செய்ய வேண்டுமென தமிழ் நாட்டின் 16 முக்கிய அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இது தொடர்பாக அக் கட்சிகள் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது, எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை பிரமாண்டமாக நடத்துவதன் மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா தமது அரசின் ஊழல்கள் மற்றும் மோசடிகளை மூடி மறைக்க முயல்கிறார். எனவே இம் மாநாட்டை புறக்கணிப்பதன் மூலம் ஜெயலலிதா நடத்தும் ராஜகமான-ஆடம்பரமான அரசியலை அம்பலப்படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளன.

திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ்நாடு காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதாதள் கட்சி என்பன உட்பட 16 கட்சிகள் இக் கோரிக்கையை விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# பாரிய மரநடுகைத் திட்டத்தில் மக்கள் ஒன்றிணைய வேண்டும்

## - த. பொ. மே நி அறைகூவல்

எமது தேசத்தின் சூழல் பாதுகாப்பிற்கான விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் முகமாக எதிர்வரும் 26-ம் திகதிமுதல் நடாத்தப்படவிருக்கும் கொடி வாரத்தில் பங்குபற்றி சூழலைப் பாதுகாக்க ஒரே கொடியின் கீழ் அணிதிரள்வோம் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தமிழீழ மக்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் "சூழல் மாசடைதல்" "சூழல் பாதுகாப்பு" ஆகிய இரு வார்த்தைகளும் இன்று உலக நாடுகளில் மிகவும் பரபரப்பாக பேசப்படுகின்றன. அந்தளவுக்கு உலக நாடுகளின் வளங்களை உறிஞ்சி ஏப்பம் விடும் பூதாகாரமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ள சூழல் பிரச்சினையானது எமது தேசத்தில் இதுவரை பாரிய அளவான தாக்கங்கள் எதையும் ஏற்படுத்தவில்லை. எனினும் இன்று பல்வேறு நெருக்கடிகளாலும். தேவைகளாலும் அளவுக்கதிகமான மரங்கள் அழிக்கப்படுகின்றமையால் இது எதிர்கால சூழலை பெரிதும் பாதிப்படையச் செய்யும்.

எனவே அழிக்கப்படும் மரங்களுக்குப்பதிலாக மீள் மரம் நடுகை செய்வதன் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் பாரிய மரநடுகைத் திட்டங்களில் மக்களை ஒன்றிணைக்கும் செயற்பாட்டை விரிவுபடுத்துவதற்காக வட தமிழீழம் தழுவிய ரீதியில் கொடிவாரம் அனுஷ்டிக்க ஏற்பாடாகியுள்ளது

தமிழீழத்தின் இம் மரநடுகைக்கு ஏற்ற காலமான ஐப்பசி மாதத்தில் மரம் நடுகையினை தூண்டிவிடும் நோக்கில் இம் மாதத்திலே இச் செயற்பாட்டை மேற்கொள்வது சிறப்பாக அமையுமென்பதாலும் இவ் வாரத்தில் 03 லட்சம் கொடிகளை விநியோகித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப் படவுள்ளது.

எனவே மக்கள் அனைவரும் விழிப்புணர்வுடன் கொடிகளைப் பெற்று ஆடைகளில் ...


பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினதும், கொத்தணிகளினதும் தலைவர்கள் பொதுமுகாமையாளர்களுக்கான

## அறிவித்தல்

17-10-94 திங்கள் காலை 10.00 மணிக்கு கூ. அ. உ ஆணையாளர் (ப/தெ) அவர்களது அலுவலகத்தில் நடைபெறவுள்ளசந்திப்பில் தவறாது பங்குபெறுமாறு தங்களை அழைக்கின்றோம் தமிழீழ நிர்வாக சேவையின் பொறுப்பாளர் அவர்களும் இங்கு சமுகமளித்து ஆலோசனை வழங்கவுள்ளார் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்

பொதுமுகாமையாளர்
வடமாகாண தெ. ப பொ. கூ. சங்க சமாசம்
(சி-10515)



கிறிஸ்துவோடு இரு, கிறிஸ்துவுக்காகச்செல்
மாற்கு 3: 16.

## "கல்வாரிதலைமைத்துவ பயிற்சி நிலைய"

### 1-வது பட்டமளிப்பு ஆராதனை

திகதி: 18 அக்டோபர் 94 (செவ்வாய்)
நேரம்: பி. ப. 4-00
இடம்: ஆலய மண்டபர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்


# தளபாட பற்றாக்குறையால் பாடசாலை பாதிப்பு

யாழ் - ஐந்து சந்திப் பகுதியில் இயங்கிவரும் வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயத்தில் போதிய தளபாட வசதி இல்லையென தெரிவிக்கப்படுகிறது தற்போதும் சில வகுப்புகளில் 'கொங்கிறீற்' கற்களே இருக்கைகளாக பயன்படுத்தப் படுவதாகவும் இங்கு போதிக்கும் ஆசிரிய ஆசிரியைகளுக்குஏற்ற கதிரை மேசைகள் இல்லையென்றும் பல சந்தர்ப்பங்களில் இவர்கள் 'நின்ற நிலையிலேயே' பாடம் போதிப்பதாகவும், 9-ம் ஆண்டு, 10 ம் ஆண்டு போன்ற உயர்நிலை வகுப்பு மாணவர்கள் பாலர் வகுப்பு கதிரைமேசைகளில் இருந்தே பயின்று வருவதாகவும் பிரஸ்தாப வித்தியாலய வட்டாரங்கள் தெரிவித்தன. (22)

# தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் கிட்டும்

(கொழும்பு)

வைத்தியசாலைகளில் தற்காலிக அடிப்படையில் இரண்டு வருடங்களுக்கு மேலாக பணிபுரிந்து வரும் ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு தமது அமைச்சு தீர்மானித்துள்ளதாக சுகாதார அமைச்சர் ஏ, எச். எம். பௌசி கூறியுள்ளார்.

பதுளையில்வைத்தியசாலை ஊழியர்களுக்கான கலந்துரையாடலில் பேசுகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அத்துடன் வெற்றிடமாக இல்லாத பதவிகளுக்கு எவரும் நியமிக்கப்படலாகாது எனவும் தெரிவித்தார்.

# நோயாளியின் வயிற்றில் சத்திரசிகிச்சைகத்திரிக்கோல்

சத்திர சிகிச்சைக்குள்ளான ஒருவரின் வயிற்றில் கத்திரிக்கோல் காணப்பட்டது. இதனை அறிந்தஅந்நோயாளி அதிர்ச்சி அடைந்தார். கட்டுகஸ்தோட்டை வாசியான 48 வயதுடைய ஒருவருக்கு இந் நிலை ஏற்பட்டது. இவர் கண்டி பேராதனை மருத்துவமனையில் அண்மையில் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப் பட்டிருந்தார்.

அடி வயிற்றில் ஏற்பட்ட வேதனை காரணமாக வைத்தியசாலைக்கு சென்ற இவர் சிறுநீர் கோளாறு இருப்பதாகக் கூறப்பட்டு சத்திர சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டார். வைத்தியசாலையில் சில தினங்கள் தங்கியிருந்த பின்னர் வீடு திரும்பிய போதும் நோய் குணமாகாததை தொடர்ந்து மீண்டும் மருத்துவமனைக்கு சென்ற போதே அவரது வயிற்றில் கத்திரிக்கோல்இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது இதனை தொடர்ந்து அவர் அதிர்ச்சியுற்று வீழ்ந்தார். தற்போது அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

# ஏறாவூர் பகுதியில் சோதனை அதிகரிப்பு

ஏறாவூர் பகுதியிலும் கிழக்கு மாகாணத்தின் ஏனைய பகுதிகளிலும்தமது பாதுகாப்பைபலப்படுத்தும் நோக்கத்துடன் பொலிசாரும், சிறிலங்கா படையினரும் இணைந்து நடமாடும் சோதனை நிலையங்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

வீதியில் ரோந்து செல்லும். படையினர் மற்றும் பொலிசார் திடீரென வீதிகளை குறுக்கே மறித்து எதிர்ப்படும் அனைவரையும் சோதனைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

இதேவேளை ஏறாவூர் பகுதியில் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் இராணுவ முகாமொன்றும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

அண்மைகாலமாக இடம்பெற்றுவரும் சம்பவங்களின் காரணமாகவே இந் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

# மத அடிப்படை வாதிகளின் கண்காணிப்புக்குதனிப்பிரிவு

## -பாரதீய ஜனதா கோரிக்கை

(சென்னை)

விடுதலைப் புலிகளின் நடவ... அத்வானி கூறியுள்ளார்;

தமிழக இந்து முன்னணி ...

## 17 மில். ரூபா தேவைப்படும்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் 33கே.வி திறன்கொண்ட லக்சபானாமின்சாரத்தை வழங்குவதற்கான திருத்த வேலைகளுக்கு பதினேழு மில்லியன் ரூபா வரையில் தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தகவலை இலங்கை மின்சார சபையின் தலைவர் வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் 33 கே.வி மின்சாரத்தை சுமந்து வரும் இரும்புக் கோபுரங்களில் 63 காணாமற் போய் விட்டதாகவும் 49 சேதமாகி இருப்பதாகவும் தெரிவித்தார்

அத்துடன் தரைவழிப் பாதையொன்று திறக்கப்பட்டதும், 72 மணி நேரத்தில் சில மின் பிறப்பாக்கிகள் அனுப்பப்பட்டு யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளுக்கு மின் வசதி செய்து கொடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## வெளிநாட்டு உதவியில் சுமார் 40 வீதம் மோசடி

மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்கென வெளிநாடுகளிலிருந்து பெறப்பட்ட பெருமளவு உதவிகளில் சுமார் 40 வீதமானவை ஊழல் மற்றும் மோசடிகளின் காரணமாக வீணாக்கப்பட்டுள்ளன. இவ்வாறு நீர்ப்பாசனத் துறையின் பிரதி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

வெலிக்கந்த பகுதியில், மகாவலித் திட்டத்தின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் மத்தியில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில். முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் இடம்பெற்ற ஊழல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் என்பவற்றைக் கண்டுபிடித்து நிவர்த்தி செய்வதில் புதிய அரசு ஒவ்வொரு நடவடிக்கையையும் எடுக்கும் எனவும் தெரிவித்தார் எனினும் அரசியல் பழிவாங்கல்கள் எதிலும் இப்போதைய அரசு ஈடுபடாது எனவும் அவர் தெளிவுபடுத்தினார்.

## ரணிலின் பதவி பறிப்பு ஜனநாயகத்திற்கு மாறானது

-ஏ. ஜே. ரணசிங்க

(கொழும்பு)

கொழும்பு மத்திய தொகுதியின், அமைப்பாளர் பதவியிலிருந்து முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நீக்கப்பட்டமையானது, நீதிக்கு முரணானதும் ஜனநாயக விரோதமானதும் ஆகும். இவ்வாறு முன்னாள் தகவல் துறை அமைச்சரும், ஜனாதிபதி தேர்தலில் சுயேட்சையா போட்டியிடுபவருமான ஏ. ஜே ரணசிங்க கூறியுள்ளார்.

கொழும்பிலிருந்து வெளியிடப்படும் டெய்லி நியூஸ் இதழுக்கு பேட்டியளித்த அவர் மேலும் கூறுகையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் போது மக்கள் இத்தகைய அநீதியான செயல்களுக்கு தகுந்த பாடம் புகட்டுவார்கள் எனவும் தெரிவித்தார்.

கடுவெல தொகுதியின் அமைப்பாளர் பதவியிலிருந்து ஏ ஜே ரணசிங்கவும, கொழும்பு மத்தியின் அமைப்பாளர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவும். கொலன்னாவ தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து நந்தா மத்தியூவும் அக்குரஸ்ஸ தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து தயானந்த விக்கிரமசிங்கவும் நீக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

## வட பகுதிக்கான சேவையில் 5 கப்பல்கள்

(கொழும்பு)

வடபகுதிக்கு சரக்குகளை ஏற்றிச் செல்வதற்கும், பயணிகளை ஏற்றிச் செல்வதற்கும் ஐந்து கப்பல்கள் உள்ளன இதில் மூன்று சரக்குக் கப்பல்களாகும். இரண்டு பயணிகள் கப்பல்களாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீதி விளக்கு அமைப்பு

யாழ் குடாநாட்டில் ஏற்பட்டுள்ள மின்சாரத்தடையால் இரவு நேர போக்குவரத்திலுள்ள இடைஞ்சல்களை குறைக்கும் முகமாக வலிமேற்கு பிரதேச சபையை உள்ளடக்கிய வீதிகளில் தேச நிர்மாணிகள் வீதிவிளக்குகளை அமைத்துள்ளனர்.

பிரமான அடிப்படையிலான மூலதன ஒதுக்கீட்டு நிதியினைக் கொண்டு இப்பகுதியில் முப்பத்திரெண்டு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.


துக் கொள்கிறோம்

பொதுமுகாமையாளர்
வடமாகாண தெ. ப பொ. கூ. சங்க சமாசம்
(சி-10515)



கிறிஸ்துவோடு இரு, கிறிஸ்துவுக்காகச்செல்
மாற்கு 3: 16.

"கல்வாரிதலைமைத்துவ பயிற்சி நிலைய"
1-வது பட்டமளிப்பு ஆராதனை

திகதி: 18 அக்டோபர் 94 (செவ்வாய்)
நேரம்: பி. ப. 4-00
இடம்: ஆலய மண்டபம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
கல்வாரி பூரண சுவிசேஷ ஊழியங்கள்,
89, பிறவுண் வீதி,
கொக்குவில்.
(9680)



பதவி வெற்றிடங்கள்
1995

1. ஆண்டு 6-11க்குரிய ஆசிரியர்கள்:-
   - ★ பயிற்றப்பட்ட/பட்டதாரி ஆசிரியர்களாக உள்ளவர்கள்,
   - ★ விண்ணப்பிக்கும் பாடங்களில் 5 வருடங்களுக்கு குறையாத கற்பித்தல் அனுபவமுள்ளவர்கள,
   - ★ சனி ஞாயிறு முழு நேரமும் கட்டாயம் கடமையாற்ற முடியுமானவர்கள்,
2. பாலர் ஆசிரியர்கள்:-
   - ★ பாலர் ஆசிரியர் பயிற்சி முடித்தவர்களும்,
   - ★ 3 வருடங்களுக்கு குறையாத கற்பித்தல் அனுபவம் உடையவர்களும்,
   - ★ வேறு சிறப்பு தகைமைகளுக்கான சான்றிதழ்கள் உடையவர்களும்,
   - ★ ஆங்கிலத்தில் திறமை உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்,
3. இரவு நேர காவலாளி:-
   - ★ 50 வயதுக்கு மேற்பட்டவரும் குடும்பப்பொறுப்புக்கள் அற்றவரும்

நம்பிக்கையானவர்களின் நற்சான்றிதழ் உடையவர்களும்.

தகைமைகளை நிரூபிக்க கூடிய சான்றிதழ்களுடன் 17.10.94 (திங்கள்) பி.ப 3.30-5.30 வரை நேரில வரவும்

சில வெற்றிடங்கள் உடன் நிரப்பப்படவுள்ளன
- அதிபர் -

ESTD:-1973 REGD: No J/7993
The Express Institute
IRUPALAI - KOPAY
(சி-10514)


மேற்கொள்ளப்பட்டுவரும் பாரிய மரநடுகைத் திட்டங்களில் மக்களை ஒன்றிணைக்கும் செயற்பாட்டை விரிவுபடுத்துவதற்காக வட தமிழீழம் தழுவிய ரீதியில் கொடிவாரம் அனுஷ்டிக்க ஏற்பாடாகியுள்ளது

தமிழீழத்தின் இம் மரநடுகைக்கு ஏற்ற காலமான ஐப்பசி மாதத்தில் மரம் நடுகையினை தூண்டிவிடும் நோக்கில் இம் மாதத்திலே இச் செயற்பாட்டை மேற்கொள்வது சிறப்பாக அமையுமென்பதாலும் இவ் வாரத்தில் 03 லட்சம் கொடிகளை விநியோகித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்படவுள்ளது.

எனவே மக்கள் அனைவரும் விழிப்புணர்வுடன் கொடிகளைப் பெற்று ஆடைகளில் அணிந்து அவ்வாரத்தை அனுஷ்டிக்க ஒத்துழைப்பு நல்குவதுடன் ஒவ்வொருவரும் தலா ஒரு மரக்கன்றையாவது நடுகை செய்து எமது தேசத்தின் வளமான மண்ணைப் பாதுகாக்குமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கேட்டுள்ளனர்

## முதலிடம் பெற்றன

அண்மையில் நடைபெற்ற வேலணை ஊர்காவற்துறை கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான பண்ணிசைப் போட்டியில் இடைநிலை, சிரேஷ்ட பிரிவு பெண்கள் குழுவில் யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம் முதலாம் இடத்தையும் இடைநிலை கனிஷ்ட பிரிவுகுழுவில் யா/புங்குடுதீவு சித்தி விநாயகர் மகாவித்தியாலயமும் முதலாம் இடத்தைப் பெற்று மாவட்ட மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளன.

## சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

இலங்கை தமிழ் அகதிகள் ஐவரின் சடலங்கள் தமிழ் நாடு அகதிமுகாம் ஒன்றின் கிணறிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

## சோதனை அதிகரிப்பு

ஏறாவூர் பகுதியிலும் கிழக்கு மாகாணத்தின் ஏனைய பகுதிகளிலும்தமது பாதுகாப்பைபலப்படுத்தும் நோக்கத்துடன் பொலிசாரும், சிறிலங்கா படையினரும் இணைந்து நடமாடும் சோதனை நிலையங்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

வீதியில் ரோந்து செல்லும். படையினர் மற்றும் பொலிசார் திடீரென வீதிகளை குறுக்கே மறித்து எதிர்ப்படும் அனைவரையும் சோதனைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

இதேவேளை ஏறாவூர் பகுதியில் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் இராணுவ முகாமொன்றும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

அண்மைகாலமாக இடம் பெற்றுவரும் சம்பவங்களின் காரணமாகவே இந் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

## மத அடிப்படை வாதிகளின் கண்காணிப்புக்குதனிப்பிரிவு

பாரதீய ஜனதா கோரிக்கை

(சென்னை)

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கென தமிழக காவல்துறையில் தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டிருப்பதைப்போல மத அடிப்படைவாதிகளையும் தீவிரவாதிகளையும், கண்காணிக்க தனியான விசேட பிரிவு ஏற்படுத்தப்பட வேண்டும் இவ்வாறு பாரதிய ஜனதாக்கட்சியின் தலைவரான எல். கே. அத்வானி கூறியுள்ளார்.

தமிழக இந்து முன்னணியின் தலைவர் ஆர். இராஜகோபாலன் மதுரையில் கொல்லப்பட்டமை தொடர்பாக இடம்பெற்ற கண்டனக்கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், கருத்து வேறுபாடுகளுக்கு கொல்லப்படுவதன் மூலம்பதில் தருவது நல்லதல்ல எனவும் தெரிவித்தார்.

## பவள் வாகனம் விபத்தில் இராணுவத்தினர் பலி

வாகனம் ஒன்றுதடம்புரண்டதில் இராணுவத்தினர் நால்வர் உயிரிழந்தனர். கடந்த 5ம் திகதி மாலை கோமரங்கடவ பகுதியில் இச் சம்பவம் இடம் பெற்றது.

கோமரங்கடவல முகமிலிருந்து பவள் கவசவாகனம் ஒன்றில் பயணம் செய்த இராணுவத்தினர், வாகனம்விபத்தில்சிக்கி கால்வாய்ஒன்றுக்குள் தடம்புரண்டதுஇதனால் ஸ்தலத்திலேயே நான்கு பேர் உயிரிழந்தனர். மேலும் மூவர் படுகாயமுற்றனர் வாகனம் பதினைந்து அடி பள்ளத்தில் வீழ்ந்து கிடக்க காணப்பட்டது,

## போலி வாக்குறுதிகள் ஆட்சேர்ப்பில் மோசடி

(கொழும்பு)

போலியான வாக்குறுதிகள் மற்றும் நம்பிக்கைகள் என்பவற்றின் அடிப்படையிலேயே சிறிஜெயவர்த்தனபுர மருத்துவமனைக்கு தாதியர்கள் திரட்டப்பட்டதாக தாதியர் சங்கம் மருத்துவமனைநிர்வாகம் மீது குற்றஞ்சாட்டியுள்ளது.

1984ம் ஆண்டில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் இற்றைவரை நிறைவேற்றப்படவில்லை எனவும், தாதியர் சங்கத்தின் சார்பில் ஜெயவர்த்தனபுர மருத்துவமனை நிர்வாகம் தொடர்பாக விசாரிக்கும் தனிநபர் ஆணைக்குழு முன்பாக தெரிவித்த சாட்சியத்திலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

ஜெயவர்த்தனபுர மருத்துவமனையில் சேரும் தாதிமார்களுக்கு அரசாங்க பொது தாதியர் பெறும் சம்பளத்தைவிட 50 வீதம் அதிகம் வழங்கப்படுமென 1984-ல் உறுதியளிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே


சமூக சேவை நிதிக்காக
யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி
திருக்குடும்பக்கன்னியர்மடம் இன்டரக்ட் கழகங்கள் இணைந்து வழங்கும்

இசை, நடன, நாடக விருந்து

திகதி:- 15-10-1994
இடம்:- புனித பத்திரிசியார் கல்லூரி மண்டபம்
நேரம்:- பி. ப 4. 00 மணி

திருமறைக்கலா மன்றத்தின் 'ஒரு தேடல்' நாடகம் மேடையேறுகின்றது ரிக்கட்டுக்களை மண்டப வாயிலில் பெற்றுக்கொள்ளலாம்
(9678)

# புலிகள் - அரசு சமாதானப் பேச்சுவார்த்தை; விடுதலைப் போராட்டத்தில் புதிய அத்தியாயம்

## சிந்தனைக்கு..

சமாதானமும் ஒருவகையில் வெற்றியைப் போன்றதே இரு தரப்பாரும் அதில் பணிகின்றனர்- உத்தமமாய் ஒருவரும் அதில் தோற்றவர் இல்லை-

- வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

91, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 15-10-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 262-
தபால்பெட்டி எண் 93

## சமாதானத்தின் மீதுள்ள வெளிப்பாடு

விடுதலைப்புலிகள் இயக்கத்தினருக்கும் சிறிலங்கா அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் இரண்டு நாள் பூர்வாங்கப் பேச்சுவார்த்தை சுமுகமாகவும், நட்புறவு ரீதியிலும் நடந்தேறியுள்ளது. திட்டமிட்டவாறு எதுவித தடங்கலும் இன்றிப் பேச்சுவார்த்தை முடிவுற்றமையானது, இருதரப்பினரைப் பொறுத்தும், மக்களைப் பொறுத்தும் சந்தோசமளிக்கும் விடயமே ஆகும்.

பேச்சுவார்த்தை நடத்த யாழ்ப்பாணம் வந்த அரசாங்க பிரதிநிதிகளுக்கு, விடுதலைப்புலிகள் இயக்கமும், தமிழ் மக்களும் அன்பான வரவேற்பை அளித்தனர் இதனை அரசாங்கத்தரப்பு பிரதிநிதிகளே வெளிப்படுத்தியுள்ளனர். அரசாங்கத்தரப்பு பிரதிநிதி லயனல் பெர்னாண்டோ முதல் நாள் பேச்சின் பின் பிரதமர் சந்திரிகாவிற்கு அனுப்பி வைத்துள்ள செய்தியில், ''மக்களும், விடுதலைப் புலிகளும் யாழ்ப்பாணத்தில் எமக்கு மகத்தான வரவேற்பு அளித்தனர்'' எனக் குறிப்பிட்டிருந்தார்.

மக்களும், புலிகளும் அளித்த இம் மகத்தான வரவேற்பு இனப்பிரச்சினை விவகாரத்திற்கு சமாதானத் தீர்வு ஒன்று காணப்படவேண்டும் என்பதில் உள்ள ஆர்வத்தையே காட்டுவதாகும். இவ்வாறு சமாதானத்தின் மீது காட்டும் ஆர்வமானது தமிழ் மக்களின் இயல்பான குணநலத்தின் வடிவமே ஆகும்;

ஆனால், இதுவே கடந்த காலத்தில் தவறான அனுமானங்களுக்கும், முடிவுகளுக்கும் சிங்கள அரசியல்வாதிகளையும், அரசாங்கங்களையும் கொண்டு சென்றதெனலாம்- இதன் காரணமாகவே சாத்வீகமான முறையில் தமிழ்மக்கள் தமது உரிமைகளைக் கேட்டபோது வன்முறையை தமிழ்

இனப்பிரச்சினை தொடர்பாக, விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் - சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் திட்டமிட்டவாறு இரு தினங்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்று முடிவடைந்துள்ளது.

1990ஆம் ஆண்டு யூன் 10-ம் திகதி தொடங்கிய இரண்டாம் கட்ட ஈழப்போரின் பின்னர் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் - சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெறும் இப்பேச்சுவார்த்தையானது இலங்கை அரசியல் வரலாற்றைப் பொறுத்து முக்கியமானது என்பது மட்டுமல்ல, சிறிலங்காவின் இன்றைய அரசியற் சூழ்நிலையில் முதன்மையானதும் கூட;

இரண்டாம்கட்ட ஈழப்போர் ஆரம்பமாகிய பின்னர் இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற குரல் பலமாகவே கேட்கத் தொடங்கியது. ஏனெனில் இரண்டாம் கட்டப் போர் அத்துணை உக்கிரமானதாகவே இருந்தது.

இராணுவத்தினர் - போராளிகள் என ஆயிரக்கணக்கில் ஆயுதம் தரித்தவர்கள் கொல்லப்பட்டதோடு ஆயிரக்கணக்கான தமிழ்மக்களும் இனப்படுகொலைக்கு உள்ளாகினர். இலட்சக்கணக்கான மக்கள் தமது வீடு, சொத்துக்கள் என்பனவற்றை இழந்து அகதிமுகாம்களில் வாழ வேண்டிய நிர்ப்பந்தமும் உருவாகியது.

இந்நிலையில் சமாதானத்தின் குரல் பல மட்டத்திலும் இருந்து ஒங்கி ஒலிக்கத் தொடங்கியது. அரச சார்பற்ற நிறுவனங்கள் கிறிஸ்தவ மத அமைப்புக்கள் என்பன இதில் தீவிர அக்கறை காட்டியதோடு அவற்றிற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. சில பௌத்த பீடங்களைச் சேர்ந்த விகாரதிபதிகளும் அக்கறை காட்டினர்.

இதேசமயம் விடுதலைப் புலிகள் இயக்கமும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தயார் என சமாதானத்தின் கதவுகளைத் திறந்து விட்டது சமாதானத்திற்கான நல்லெண்ண சமிக்ஞையாக சில நடவடிக்கைகளையும் மேற்கொண்டது, போர்க் கைதிகளாக தமது காவலில் இருந்த பொலிசாரில் ஒருபகுதியினரையும் விடுதலை செய்தது-

ஆயினும் ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே முடிந்த முடிவு என அறிவித்தது. கடந்த வருடம் மே மாதம் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட சிறிலங்காவின் ஜனாதிபதி பிரேமதாசா இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என கூறிக்கொண்டாலும், அவரின் பின்னர் வந்த ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க இலங்கையில் இனப்பிரச்சினை என்பதே இல்லை. பயங்கரவாதப் பிரச்சினையே உள்ளது என தெளிவாக அறிவித்தார்.

ஜனாதிபதி பிரேமதாசா காலத்தில், இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண சர்வகட்சி மாநாடு, பாராளுமன்றத் தெரிவிக்குழு என்பன அமைக்கப்பட்டபோதும் அவற்றால் இனப்பிரச்சினை தொடர்பாக முன்னேற்றகரமான முடிவு எதையும் எடுக்கமுடிய

ளின் வெற்றிகரமான தாக்குதல்களும் கடற்புலிகளின் வளர்ச்சியும், சிறிலங்கா இராணுவக் கட்டமைப்பைச் சிதைத்த அதேவேளை, போராட்டத்தில் புதிய பரிணாமங்களையும் கொண்டதாக மாறியது.

இவ்வாறானதொரு அரசியற்சூழ்நிலையில்தான் வடக்கு-கிழக்குப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு என்றதொரு நிலைப்பாடு பொதுசனஐக்கிய முன்னணியினால் 1994 இல்நடந்த சில மாகாணத்திற்கான தேர்தலில்முன்வைக்கப்பட்டது. இதில் அக்கட்சிக்குக் கிடைத்த வெற்றியானது பொதுத் தேர்தலிலும், அதேகொள்கையை வலியுறுத்தி வெற்றிபெறவும் வாய்ப்பளித்தது.

இந்த வகையில் பொ. ஐ. முன்னணிக்கு கிடைத்த வெற்றியானது இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வுகாண கிடைத்தஅங்கீகாரமாகவும்கருதப்பட்டது. இதனைத் தொடர்ந்தே பிரதமர் சந்திரிகா குமாரதுங்க இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்பதற்கான முயற்சியில் இறங்கினார்.

இதன் வெளிப்பாடாக வடக்கு - கிழக்கில் நடைபெறுவது முன்னைய அரசாங்கம் கூறியது போல் பயங்கரவாதப் பிரச்சினை அல்ல. இனப்பிரச்சினைதான் என்பது பொ. ஐ. முன்னணி ஏற்றுக்கொண்டது. சிறிலங்கா அரசாங்கத்தின் இந்நிலைப்பாடு மாற்றமானது இனப்பிரச்சினை விவகாரத்தில் முக்கியமான அம்சமாகும். இதன் மூலம், இலங்கையில் உள்ள தமிழ் சிறுபான்மை இனம் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளது. அதற்குப் பிரச்சினைகள் உண்டு என்பதை புதிய அரசாங்கம் ஏற்றுக்கொள்வதாக இருந்தது.

இரண்டாவது முக்கிய அம்சம், இனப்பிரச்சினை விவகாரத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்துடனும் உடன்பாடு கண்டால் அன்றி, வேறு எவருடனும் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகளோ, சமரசத் தீர்வுகளோ பிரச்சினைக்குத் தீர்வு காணாது என்பதாகும்.

இந்த வகையில் பிரதமர் சந்திரிகா குமாரதுங்க பதவி ஏற்று முதலாவது பத்திரிகையாளர் மாநாட்டிலேயே விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் முக்கிய பிரதிநிதிகள் என்பதை ஏற்றுக் கொண்டார். இந்த வகையில் இனப் பிரச்சினைத் தீர்வென்பது விடுதலைப் புலிகளுடனேயே காணப்பட முடியும் என்பதையும் உறுதிப்படுத்தினார்.

இந்த வகையில் வடக்கு- கிழக்கில் இருப்பது இனப்பிரச்சினை என்பதும், அதனைவிடுதலைப்புலிகளுடனேயே பேசித் தீர்க்க முடியும் என்பதும், சிறிலங்கா அரசாங்கத்தைப் பொறுத்து முக்கியமான இரு அரசியல் தீர்மானங்கள் ஆகும். இத்தீர்மானங்களே இன்றைய பேச்சு வார்த்தையின் அடிப்படையாக அமைந்தன என்று கூறுவதும் மிகையல்ல.

இதே சமயம் பொ. ஐ முன்னணி அரசாங்கம் இனப் பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்பதற்கென பேச்சுவார்த்தையை தொடங்க முற்பட்டுள்ள காலம் மிகவும் முக்கியமான காலமாகும். சிறிலங்காவின் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் போட்டியில் அரைக்கிணறு தாண்டிய நிலையிலேயேஇம்முயற்சியை சந்திரிகா குமாரதுங்கா ஆரம்பித்துள்ளார் எனலாம் இதுஒரு வகையில் அவரின் துணிவையும், அதேசமயம் அவரது அரசியல் சாதுரியத்தையும் வெளிக்காட்டு

ஒரு துணிச்சலான முடிவுதான். ஆனால், இதன்மூலம் சந்திரிகா குமாரதுங்கா பௌத்த சிங்கள அடிப்படைவாதத்தைப் புறந்தள்ளிவிட்டதாகச் சொல்ல முடியாது.

ஏனெனில் பூர்வாங்கப் பேச்சுவார்த்தையில் பௌத்த பேரினவாதத்தைச் சீண்டிவிடக் கூடிய அம்சங்கள் எதையும் அவர் சேர்த்துக் கொண்டதாகத் தெரியவில்லை பேச்சுவார்த்தையின் முக்கிய அம்சங்களாக நிகழ்ச்சி நிரலில் இடம் பெறுபவை புனர் நிர்மாணமும், மீள் அமைப்புமாகவே உள்ளன. யுத்த நிறுத்தம், போக்குவரத்துப் பாதை விவகாரங்கள் நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்றிருப்பினும் அவற்றின் தீர்மானங்கள் தற்போது எடுக்கப்படும் என எதிர்பார்க்கமுடியாதுஉள்ளது இவை இரண்டுபற்றிய தீர்மானங்களும் அதிலும் குறிப்பாக யுத்த நிறுத்தம் பற்றிய தீர்மானம் ஜனாதிபதித் தேர்தலின் பின்பே எடுக்கப்படும் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பலமாகவே நம்பப்படுகின்றது

ஏனெனில், இது குறித்த தீர்மானங்களானது இராணுவத் தரப்புடனும், ஜனாதிபதி பதவியுடனும் நெருக்கமான தொடர்பு கொண்டதாகும். இதன் காரணமாக அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டிய எந்த நிலையையும் உருவாக்கி அதன் மூலம், இராணுவத்தரப்பிலோ, அதை ஒட்டி பேரினவாதிகள் தரப்பில் இருந்தோ பிரச்சினை உருவாக்க சந்திரிகா இப்போதைக்கு விரும்பப்போவதில்லை என்றே ஊகிக்கப்படுகின்றது

இதே சமயம், நிகழ்ச்சி நிரல் குறிப்பிடாத அதேவேளை நிகழ்ச்சி நிரலில் உள்ள ஏனைய முக்கிய பிரச்சினைகள் என்பதில் ஜனாதிபதித் தேர்தலை வடக்கில் நடத்துவது குறித்து அரசாங்கத் தரப்பு பிரதிநிதிகள் பேசலாம் என அரசியல் விமர்சகர்கள் பலமாகவே எதிர்பார்த்தனர். இதற்கு தகவல்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான தர்ம சிறி சேனநாயக்காவின் அறிவிப்புக்களை ஆதாரம் காட்டுகின்றனர்.

ஆனால் மேலே கூறப்பட்டது போன்று இப் பேச்சுவார்த்தையில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகப் பேசப்படாது விடினும்கூட யுத்தத்திற்குத் தீர்வு காண்பதில் அரசாங்கம் எடுத்துவரும் முயற்சி முன்னேற்றம் அடைந்துள்ளதாகத் தெற்கில் தேர்தல் பிரசாரம் செய்வதற்கு தற்பொழுது முதற்கட்டப் பேச்சில் ஏற்பட்ட முன்னேற்றம் உதவக் கூடும் இதன் மூலம் கணிசமான வாக்குகளை தேர்தலில் பெற்றுக்கொள்ள வாய்ப்புண்டு. அதிலும் குறிப்பாக தென்னிலங்கையில் தமிழ் வாக்காளரின்கணிசமான வாக்குகளைப் பெறும் வாய்ப்புக் கிட்டலாம்;

இந்த வகையில் பார்க்கும் போது பிரதமர் சந்திரிகாவின் பேச்சுவார்த்தை குறித்த முடிவானது. பௌத்த பேரினவாதிகளைச் சீண்டாத அதேவேளை தமிழ்மக்கள் மத்தியில் ஒரு நல்லபிப்பிராயத்தைத் தோற்றுவிக்கும் நடவடிக்கையாகவே அடையாளம் காணமுடியும்.

இதன் மூலம், பிரதமர் சந்திரிகாவின் இலக்கு ஜனாதிபதித் தேர்தலில் பெரு வெற்றியை ஈட்டிக் கொள்ளும் நோக்கம் கொண்டதாக இருக்கலாம். இவ் வெற்றியின் அவசியம் பாராளுமன்றத்

ப்பி வைத்துள்ள செய்தியில், ''மக்களும், விடுதலைப் புலிகளும் யாழ்ப்பாணத்தில் எமக்கு மகத்தான வரவேற்பு அளித்தனர்'' எனக் குறிப்பிட்டிருந்தார்.

மக்களும், புலிகளும் அளித்த இம் மகத்தான வரவேற்பு இனப்பிரச்சினை விவகாரத்திற்கு சமாதானத் தீர்வு ஒன்று காணப்படவேண்டும் என்பதில் உள்ள ஆர்வத்தையே காட்டுவதாகும். இவ்வாறு சமாதானத்தின் மீது காட்டும் ஆர்வமானது தமிழ் மக்களின் இயல்பான குணநலத்தின் வடிவமே ஆகும்.

ஆனால், இதுவே கடந்த காலத்தில் தவறான அனுமானங்களுக்கும், முடிவுகளுக்கும் சிங்கள அரசியல்வாதிகளையும், அரசாங்கங்களையும் கொண்டு சென்றதெனலாம். இதன் காரணமாகவே சாத்வீகமான முறையில் தமிழ்மக்கள் தமது உரிமைகளைக் கேட்டபோது வன்முறையை தமிழ் மக்கள் மீது சிங்கள அரசுகள் கட்டவிழ்த்து விட்டன. குண்டர்கள் மூலமும்- ஆயுதத்தின் மூலமும் தமிழர்களை நசுக்க முற்பட்டன

ஆனால் தமிழ்மக்கள் திருப்பி அடித்தபோது தான் தமிழர்களின் குண நலனில் மற்றுமொரு பக்கம் உண்டு என்பதை சிங்கள அரசுகள் புரியத் தொடங்கின. தமிழ்மக்களின் உரிமைப் பிரச்சினைக்கு ஆயுதத்தின் மூலமோ, பலாத்காரம் மூலமோ தீர்வு காணமுடியாது என்பதைப் புரிந்து கொண்டன.

இன்றும் தமிழ்மக்கள் சமாதானத்தின் மீது காட்டும் அக்கறையானது சமாதானத்தின் மீதுள்ள பற்றுதலே ஒழிய தமிழ் மக்களின் பலவீனம் அல்ல. தமிழ்மக்கள் சமாதானத்தின்பால் காட்டும் அக்கறைபோல் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதிலும் பாதுகாப்பதிலும் உறுதியாகவே உள்ளனர்.

இதேசமயம் கடந்த இரு தினங்களும் நடைபெற்ற பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகள் முன்னேற்றகரமான நிலையில் நடைபெற்று முடிந்துள்ளது. இவ் இரண்டு நாள் பேச்சுகள் இரு தரப்பினரும் சந்தித்துக் கொள்ள வழி செய்துள்ளதோடு, அன்றாட மக்களின் பிரச்சினை தொடர்பான அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தை என்ற ரீதியிலேயே இது அமைந்ததெனலாம்.

ஆயினும் இப்பேச்சுவார்த்தையிலும் கணிசமான முக்கியத்துவம் உண்டு- ஒருவர் மீது ஒருவர் அழுத்தத்தைத் திணிக்கவோ அன்றி விட்டுக் கொடுக்கவோ தேவையற்ற முறையில் இடம்பெற்ற இப் பேச்சுவார்த்தையானது எதிர்கால சமாதான முயற்சிகளுக்கு நல்லதொரு சூழ்நிலையை உருவாக்க உதவக் கூடும்- இதனை அரசாங்கத் தரப்பு பிரதிநிதிகள் புரிந்து கொள்வதோடு, அதற்கேற்ப முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

இல்லாது தமிழ்மக்களினதும், புலிகளினதும் அன்பான வரவேற்பையும், நட்பையும் அப்பாவித்தனமென்றோ, பலவீனமென்றோ மதிப்பிட்டு விட்டால் கடந்த கால அரசியல்வாதிகள் செய்த தவறை மீண்டும் ஒருமுறை செய்வதாகவே அமையும். இது முக்கியமான பிரச்சினைகள் தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடைபெற வேண்டியுள்ள நிலையில் ஓர் ஆரோக்கியமான நிலையை உருவாக்க உதவ மாட்டாது-

ளாக தமது காவலில் இருந்த பொலிசாரில் ஒருபகுதியினரையும் விடுதலை செய்தது-

ஆயினும் ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே முடிந்த முடிவு என அறிவித்தது. கடந்த வருடம் மே மாதம் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட சிறிலங்காவின் ஜனாதிபதி பிரேமதாசா இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என கூறிக்கொண்டாலும், அவரின் பின்னர் வந்த ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க இலங்கையில் இனப்பிரச்சினை என்பதே இல்லை. பயங்கரவாதப் பிரச்சினையே உள்ளது என தெளிவாக அறிவித்தார்.

ஜனாதிபதி பிரேமதாசா காலத்தில், இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண சர்வகட்சி மாநாடு, பாராளுமன்றத் தெரிவிக்குழு என்பன அமைக்கப்பட்டபோதும் அவற்றால் இனப்பிரச்சினை தொடர்பாக முன்னேற்றகரமான முடிவு எதையும் எடுக்கமுடியவில்லை. இதற்கு இனப்பிரச்சினையுடன் நேரடியாக சம்பந்தப்பட்டவர்களும் தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு தலைமை தாங்குபவர்களுமான விடுதலைப்புலிகள் பங்குபற்றாமையே காரணம் எனலாம்.

இதே சமயம் அரசாங்கத்திற்குப் புறம்பாக ஆனால் அரசாங்கத்தில் பங்கு கொண்டிருந்த இ.தொ.கா தலைவர் தொண்டமான் சபாநாயகர் எம். எச். முகமது போன்ற அரசியல்வாதிகள் மேற்கொண்ட சமாதான முயற்சிகளுக்கும் ஐ.தே.க அரசாங்கத்தால் தடை விதிக்கப்பட்டது என்றே கொள்ளலாம் இதற்கு சிங்கள பௌத்தபேரினவாதத் திடமும் இராணுவத்தரப்பில் இருந்து எழுந்த எதிர்ப்பும் காரணங்களாகின.

இந்த நிலையில் சுமார் 4வருடங்களுக்குமேலாக நிகழ்ந்த மோதல்கள் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு சாத்தியமாகாது என்பதைத் தெளிவாகவே உணர்த்தியிருந்தது இதிலும் குறிப்பாக, ஒப்பரேசன் யாழ்தேவி இராணுவ நடவடிக்கை முறியடிப்பு, இதயபூமி I, ஒப்பரேசன தவளை போன்ற விடுதலைப் புலிக

வகையில் இனப்பிரச்சினைக்கு [illegible] புலிகளுடனேயே காணப்பட முடியும் என்பதையும் உறுதிப்படுத்தினார்.

இந்த வகையில் வடக்கு- கிழக்கில் இருப்பது இனப்பிரச்சினை என்பதும், அதனைவிடுதலைப்புலிகளுடனேயே பேசித் தீர்க்க முடியும் என்பதும், சிறிலங்கா அரசாங்கத்தைப் பொறுத்து முக்கியமான இரு அரசியல் தீர்மானங்கள் ஆகும். இத்தீர்மானங்களே இன்றைய பேச்சுவார்த்தையின் அடிப்படையாக அமைந்தன என்று கூறுவதும் பிழையல்ல.

இதே சமயம் பொ. ஐ முன்னணி அரசாங்கம் இனப் பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்பதற்கென பேச்சுவார்த்தையை தொடங்க முற்பட்டுள்ள காலம் மிகவும் முக்கியமான காலமாகும். சிறிலங்காவின் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் போட்டியில் அரைக்கிணறு தாண்டிய நிலையிலேயே இம்முயற்சியை சந்திரிகா குமாரதுங்கா ஆரம்பித்துள்ளார் எனலாம் இதுஒரு வகையில் அவரின் துணிவையும், அதேசமயம் அவரது அரசியல் சாதுரியத்தையும் வெளிக்காட்டுவதாகவே உள்ளது.

சிறிலங்காவின் அரசியல் வரலாறு பௌத்த சிங்கள அடிப்படைவாதிகளால் என்றுமே அலைக்கழிக்கப்பட்ட வரலாறாகும். தேர்தல் காலங்களில், பௌத்த சிங்கள பேரினவாத சக்திகளை சீண்டிவிடும் எந்த முயற்சியையும் எந்த அரசியற் தலைவர்களும் மேற் கொள்ளத் துணிந்த காலமும் ஆகும்.

மாறாக, பௌத்த சிங்கள அடிப்படை வாதிகளைத் திருப்திப்படுத்தவும், கோரிக்கைகளை நிறைவேற்றிவைக்கும் காலமுமாகும். இதற்கு உதாரணமாக வேறுயாரையும் குறிப்பிடவேண்டிய அவசியம் இல்லை. இன்றைய பிரதமரின் தந்தையான எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா இதற்காகவே தனிச் சிங்களமசோதா சட்டத்தைக் கொண்டு வந்ததைச் சுட்டிக்காட்டமுடியும்.

இந்த வகையில், ஜனாதிபதித் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட நிலையில், பூர்வாங்க பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தமையானது. ஒருவகையில்

முன்னேற்றம் அ[illegible] பிரசாரம் செய்வதற்கு தற்பொழுது முதற்கட்டப் பேச்சில் ஏற்பட்ட முன்னேற்றம் உதவக் கூடும் இதன் மூலம் கணிசமான வாக்குகளை தேர்தலில் பெற்றுக்கொள்ள வாய்ப்புண்டு. அதிலும் குறிப்பாக தென்னிலங்கையில் தமிழ் வாக்காளரின் கணிசமான வாக்குகளைப் பெறும் வாய்ப்புக் கிட்டலாம்.

இந்த வகையில் பார்க்கும் போது பிரதமர் சந்திரிகாவின் பேச்சுவார்த்தை குறித்த முடிவானது. பௌத்த பேரினவாதிகளைச் சீண்டாத அதேவேளை தமிழ்மக்கள் மத்தியில் ஒரு நல்லபிப்பிராயத்தைத் தோற்றுவிக்கும் நடவடிக்கையாகவே அடையாளம் காணமுடியும்.

இதன் மூலம், பிரதமர் சந்திரிகாவின் இலக்கு ஜனாதிபதித் தேர்தலில் பெரு வெற்றியை ஈட்டிக் கொள்ளும் நோக்கம் கொண்டதாக இருக்கலாம். இவ்வெற்றியின் அவசியம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை அற்ற நிலையில் சந்திரிகா குமாரதுங்காவிற்கு அவசியமானது என்பதில் சந்தேகமில்லை. இதுவே அவரது அரசியல் எதிர்காலத்திற்கு அத்திவாரமாகவும் அமையலாம். அத்தோடு, இனப்பிரச்சினைகுறித்து, அவரது அடுத்தகட்ட நடவடிக்கையை நிர்ணயிப்பதாகவும் இருக்கக்கூடும்.

ஆனால் எது எவ்வாறு இருப்பினும் இப்பேச்சுவார்த்தையானது விடுதலைப்புலிகள் இயக்கத்தைப் பொறுத்தும் தமிழ்மக்களின் விடுதலைபோராட்டம் குறித்தும் முன்னேற்றகரமான ஒருபடி என்றே கொள்ள முடியும். இப்பேச்சுவார்த்தை நிகழ்ச்சி நிரல் அம்சங்கள் இனப்பிரச்சினையின் அடிப்படைகளைத் தொடவில்லையாயினும் இனப்பிரச்சினையும் அதில் விடுதலைப்புலிகளின் பங்கும் தெளிவாகவே வலியுறுத்தப்படுகின்றது தமிழ் மக்களின் பிரச்சினை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது ஆனால், இவை யாவும், பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளில் ஒருவரான கரிகாலன் குறிப்பிட்டது போன்று, அரசாங்கத்திட முடிவிலேயே அனைத்தும் தங்கியுள்ளது.

ஜெயராஜ்

களுத்துறை சிறையில் உள்ள

# 50 தமிழ் கைதிகளுக்கு எதிராக விரைவில் வழக்கு தாக்கல்

(கொழும்பு)

களுத்துறை தடுப்பு முகாமில் சிறிலங்கா படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள 50 தமிழ்க் கைதிகளுக்கு எதிராக விரைவில் வழக்கு தொடரப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பல வருடங்களாக சிறிலங்கா படையினர் கிழக்கின் பல பாகங்களிலும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வீடுகளில் இருந்த பல இளைஞர்களைகைது செய்து எதுவித விசாரணைகளும் இன்றி தடுத்து வைத்திருப்பது தெரிந்ததே தற்போது களுத்துறை தடுப்பு முகாமில் மட்டும் 170 தமிழ் இளைஞர்கள் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு தடுத்து வைக்கப் பட்டுள்ளோரில் 50 பேர் மீதே தற்போது வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது இவர்களில் பலர் கிழக்கு மாகாணத்தைச்சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது இவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல செய்வதற்கு இவர்களிடமிருந்து பொலிசாரால் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மட்டுமே சாட்சியமாகவுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

## தடுப்புக்காவலை விலக்க ஆணைக்குழு சிபார்சு

(கொழும்பு)

சந்தேகத்தின்பேரில் கைதாகிப் பல மாதகாலமாகத் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டுள்ளோர் மீதான தடை உத்தரவை விலக்கிக்கொள்ளுமாறு தடுப்புக் காவல் கைதிகள் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு சிபார்சு செய்துள்ளதாகத் தெரிகிறது-

நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படாதும் வழக்குத் தொடரப்படாதும் பலமாத காலமாக சிறை வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் மீதான தடை உத்தரவை நீக்குமாறு இந்த ஆணைக்குழு கடந்த ஐந்தாம் திகதி தனது முதலாவது அறிக்கையை வெளிநாட்டு வர்த்தக, நீதி, அரசியலமைப்பு அமைச்சர் ஜி எல். பீரிஸிடம் கையளித்துள்ளது.

# கொள்ளை நோயை தடுக்க உடன் சிகிச்சை அவசியம்

- சுகாதார பரிசோதகர் தெரிவிப்பு

இந்தியாவிலிருந்து வருபவர்கள் அங்கிருந்துவரும் தானிய மற்றும் உணவுப் பொருட்கள் மூலமாக கொள்ளை நோய் எமது நாட்டை வந்தடையலாம் பொதுவாக கொள்ளை நோயைப்பரப்பும் விஷக் கிருமிகள் காட்டிலுள்ள எலிகளின் தெள்ளில் காணப்படுகிறது காட்டிற்கு வேட்டை ஆட விறகு வெட்டப் போனவர்கள் மூலமாகவும் இந் நோய் பரவலாம் இந்நோயில் மூன்று விதமான வகைகள் காணப்படினும் நியுமோனிக் பிளேக் என்ற வகையே நுரையீரலை தாக்குகின்றது இதனால் சளி துப்பல் மூலமாக காற்றோடு இக் கிருமிகள் நோயாளியிலிருந்து ஒரு சுகதேகிக்குத் தொற்றும் தன்மை உடையது ஆகவே இந்த வகையை முதலில் இனம் கண்டால் உடனடி தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு இந்நோய் பரவுவதைத் தடுக்கலாம். என்று றெக்கிளமேசன் சன சமூக நிலையத்தின் இரவுப் பாடசாலை மாணவர்களுக்கு பிளேக் நோய் தொடர்பான கலந்துரையாடலில் பங்கு பற்றி கருத்துரை வழங்கும் போது யாழ். மாநகரசபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க. மயில்வாகனம் தெரிவித்தார்.

றெக்கிளமேசன் சனசமூக நிலையத் தலைவர் ஆ. புவனேந்திரன் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் யாழ். மாநகரப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க மயில்வாகனம் தொடர்ந்து உரையாற்றும் போது அண்மையில் இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் ஏற்பட்ட பூமிநடுக்கம் சூரத் நகரில் ஏற்பட்ட கொள்ளை நோய்க்கு காரணமாய் இருக்கலாம் பூகம்பம் காரணமாக காட்டு எலிகள் நாட்டுக்குள் பிரவேசித்து நாட்டு எலிகளுக்கு இக் கிருமியைப் பரப்பி இருக்கலாம் என்றார்

நிகழ்ச்சி முடிவில் ஆசிரியை திருமதி பி ஞானப்பிரகாசம் நன்றிதெரிவித்து உரையாற்றினார்.



விடுதலைப் புலிகளுடனான முதலாம் கட்ட பேச்சுக்களை முடித்துக்கொண்டு நேற்று கொழும்பு புறப்பட்டுச் சென்ற அரசதரப்பு பிரதிநிதிகளை ஏற்றிச்செல்ல வந்த உலங்குவானூர்தி, யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் தரித்து நிற்பதையும, அரசதரப்பு பிரதிநிதி லயனல் பெர்னாண்டோ கையசைத்து விடைபெறுவதையும் படத்தில் காணலாம்.

# புலிகளிடம் கைதிகளாகவுள்ள ராணுவத்தினரை பற்றியும் பேசினோம்

## அரசதரப்பு பிரதிநிதி கொழும்பில் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்துள்ளன என்றும் இப் பேச்சுவார்த்தைகளை தொடர்ந்தும் மேற்கொள்ள இருதரப்பினரும் இணங்கியுள்ளர்கள் என்றும், யாழ்ப்பாணம் சென்ற அரசாங்க பிரதிநிதிகள் தெரிவித்தனர். யாழ்ப்பாணத்தில் பேச்சுவார்த்தைகளை நடத்தி விட்டுவிமானமூலம் கொழும்பு சென்ற இவர்கள் இரத்மலான விமான நிலையத்தில் செய்தியாளரிடம் இவ்வாறு கூறினர் இவர்கள் வெகுவிரைவில் மீண்டும் யாழ்ப்பாணம் செல்லவுள்ளனர் என அறிவிக்சப்பட்டுள்ளது.

பிரதமமந்திரியின் செயலாளர் பலபத்த பென்டி கருத்துத் தெரிவிக்கையில் பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்துள்ளன என்று சொன்னார் விடுதலைப்புலிகள் வசமுள்ள இராணுவத்தினரின் விடுதலை உட்பட பல விடயங்கள்பற்றி தாங்கள் ஆராய்ந்ததாக, அரசதரப்பு பிரதிநிதிகள்தெரிவித்தனர். இந்த விடயங்கள் பற்றி மீண்டும் ஆராயப்படும் எனவும் கூறப்பட்டது.

சமீபத்தில் விடுதலைப்புலிகளின் இரண்டு தாக்குதல்கள் நடைபெற்றபோதும் சமாதானப் பேச்சுக்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதியிலும் வாக்கெடுப்பை நடத்துவதற்கு விடுதலைப்புலிகளின் ஒத்துழைப்பை அரசாங்கம் கோருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# அடுத்த கட்டப் பேச்சில் இரு அமைச்சர்கள் பங்குபற்றலாம்

(யாழ்ப்பாணம்)

பேச்சுவார்த்தை நாம் எதிர்பார்த்ததைவிட முன்னேற்றகரமாக நடைபெற்றது- அடுத்த கட்ட பேச்சில் இரு அமைச்சர்கள் கலந்து கொள்ளலாம்-

நேற்று அரசபிரதிநிதிகளிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை முடிவடைந்ததும் எமது விசேட செய்தியாளருக்கு அளித்த பேட்டியொன்றில் அரச பிரதிநிதிகளில் ஒருவரும் தகவல்துறை அமைச்சின் செயலாளருமாகிய லயனல்பெர்னாண்டோ தெரிவித்தார்

அடுத்தகட்ட பேச்சிற்கு அரச பிரதிநிதிகள் மாற்றப்படுவார்களா? என எமது செய்தியாளர் கேட்டதற்கு இதை நாம் தீர்மானிப்பதில்லை- பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவே தீர்மானிப்பார், அடுத்த கட்ட பேச்சுவார்த்தைக்கு வரும் குழுவில் இரு அமைச்சர்கள் உட்படலாம் என்றும் இதில் ஒருவர் தமிழராக இருக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்

யார் அந்த அமைச்சர்கள் என கேட்டதற்கு முன்னணி அமைச்சர்களாக இருக்கலாம்- இவர்களில் அரசியல் விவகார அமைச்சர் ஜி- எல் பீரிஸ் இடம் பெறலாம் எனவும் அவர் தெரிவித்தார்-

(முன்பக்கத் தொடர்ச்சி)

# பொருள்கள் விலைகுறைப்பு பரிசீலனை

இப் பேச்சுவார்த்தைகளின்போது வட பகுதிக்குள் அத்தியாவசிய பொருள்களைக் கொண்டுவருவதில் உள்ள தடைகள் தாமதங்கள் சிக்கல்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது கப்பலில் பொருள்களைக் கொண்டுவருவதற்கு கப்பல் கட்டணத்தைக் குறைப்பது அல்லது முற்றாக நீக்குவது பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என அரசதரப்பு பிரதிநிதிகள் வாக்குறுதியளித்தனர்

தாண்டிக்குளம் பாதை ஊடாக லொறிகளில் பொருட்களைக் கொண்டு வருவதில் ஏற்படும் இடையூறுகள் பற்றியும் விடுதலைப்புலிகள் எடுத்து விளக்கினர். இந்தத் தடைகளை நீக்குவதற்குஅல்லது குறைப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அரசாங்கதரப்பில வாக்குறுதி அளிக்கப்பட்டது

அத்தியாவசியப் பொருட்களை பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்க மூலம் விநியோகித்து அதன் மூலம் அப்பொருட்களின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அரசதரபபு பிரதிநிதிகள் கூறினர்.

# அரசியல் தீர்வானால் முற்றுகை ஏன்?

அடுத்ததாக போக்குவரத்துப் பாதையைத் திறந்து விடுவது சம்பந்தமாகப் பேசப்பட்டது பூநகரியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தை விலகச்செய்து பூநகரிப் பாதையைத் திறந்து விடவேண்டுமென விடுதலைப் புலிகள் வலியுறுத்தினர். பூநகரிபாதையைத் திறப்பதல் தமிழ் மக்களின் போக்குவரத்துப் பிரச்சினை தீர்வடையுமென்றும் வடபகுதியில் இயல்புநிலை தோன்ற அது வழிவகுக்குமென்றும் புலிகள் எடுத்துக் கூறினர்.

யாழ்ப்பாண முற்றுகையை இலக்காகக் கொண்டே இராணுவம் அங்கு தொடர்ந்து தரித்துநிற்பதாகவும் அரசுக்கு இராணுவத்தீர்வில் நம்பிக்கையில்லாத பட்சத்தில் இராணுவத்தை விலக்கி சங்குப்பிட்டிப் பாதையைத் திறந்து தமிழரின் நல்லெண்ணத்தைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் முயற்சிக்க வேண்டும் என்றும் புலிகளின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்தனர்.

இந்தப் பிரச்சினை பற்றி இராணுவ உயர் பீடத்துடன் பேச்சுக்களை நடாத்தப்போவதாக அரசு தரப்பு பிரதிநிதிகள் கூறினர்.

# மீள் புனரமைப்பு குறித்து ஆராய்வு

அடுத்ததாக பொருளாதாரப் புனர் நிர்மாணம் பற்றி விரிவாகப் பேசப்பட்டது.

வடபகுதியில் சீர்குலைந்திருக்கும் அத்தியாவசிய சேவைகளை சீரமைப்பதற்கு உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவதாக அரச தரப்பு பிரதிநிதிகள் வாக்குறுதி அளித்துள்ளனர்

முக்கியமாக மின்சார விநியோகத்தை மீள அமைத்தல், வீதிகளைப் புனரமைத்தல், நீர்ப்பாசன திட்டங்களை புனரமைத்தல், பாடசாலைகள், வைத்தியசாலைகளைத் திருத்தி ... சம்பந்தமாக உடன நடவடிக்கை எடுக்குமென அரசாங்க தரப்பினர் ஒப்புக்கொண்டனர்.

மின்சார சேவைகளுக்கான ஜெனரேற்றர்களை எடுத்து வருவது பற்றி ஆராயப்பட்டது,

வடபகுதிக்கு தேவையான அரச அலுவலர்களை நியமிப்பது தொடர்பாகவும் பரிசீலனை செய்யப்பட்டது.

நூல் நிலையம் எரித்ததற்கான காரணத்தை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க விசாரணைக்குழு ஒன்று நியமிப்பது பற்றியும் புதிய நூல் நிலையத்தை மீள அமைப்பது பற்றியும்



நேற்று பத்திரிகையாளர்சந்திப்பில் கலந்துகொண்டபுலிகளின் பிரதிநிதிகள டொமினிக், கரிகாலன் ஆகியோரையும் அரச தரப்பு பிரதிநிதிகள் பலபத்த பென்டி, லயனல் பேர்னாண்டோ ஆகியோரையும் மேலுள்ள படத்தில் காணலாம்.

டுள்ள இராணுவத்தை விலகச்செய்து பூநகரிப் பாதையைத் திறந்து விடவேண்டுமென விடுதலைப் புலிகள் வலியுறுத்தினர். பூநகரிப்பாதையைத் திறப்பதல் தமிழ் மக்களின் போக்குவரத்துப் பிரச்சினை தீர்வடையுமென்றும் வடபகுதியில் இயல்புநிலை தோன்ற அது வழிவகுக்குமென்றும் புலிகள் எடுத்துக் கூறினர்.

யாழ்ப்பாண முற்றுகையை இலக்காகக் கொண்டே இராணுவத்தை விலக்கி சங்குப்பிட்டிப் பாதையைத் திறந்து தமிழரின் நல்லெண்ணத்தைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் முயற்சிக்க வேண்டும் என்றும் புலிகளின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்தனர்.

இந்தப் பிரச்சினை பற்றி இராணுவ உயர் பீடத்துடன் பேச்சுக்களை நடாத்தப்போவதாக அரசு தரப்பு பிரதிநிதிகள் கூறினர்.



நேற்று பத்திரிகையாளர்சந்திப்பில் கலந்துகொண்டபுலிகளின் பிரதிநிதிகள டொமினிக், கரிகாலன் ஆகியோரையும் அரச தரப்பு பிரதிநிதிகள் பலபத்தபெண்டி, லயனல் பெர்னாண்டோ ஆகியோரையும மேலுள்ள படத்தில் காணலாம்.

# மீள் புனரமைப்பு குறித்து ஆராய்வு

அடுத்ததாக பொருளாதாரப் புனர் நிர்மாணம் பற்றி விரிவாகப் பேசப்பட்டது.

வடபகுதியில் சீர்குலைந்திருக்கும் அத்தியாவசிய சேவைகளை சீரமைப்பதற்கு உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக அரச தரப்பு பிரதிநிதிகள் வாக்குறுதி அளித்துள்ளனர்

முக்கியமாக மின்சார விநியோகத்தை மீள அமைத்தல், வீதிகளைப் புனரமைத்தல், நீர்ப்பாசன திட்டங்களை புனரமைத்தல், பாடசாலைகள், வைத்தியசாலைகளைத் திருத்தியமைத்தல் போக்குவரத்தைச் சீர் செய்தல் போன்றன சம்பந்தமாக உடன நடவடிக்கை எடுக்குமென அரசாங்க தரப்பினர் ஒப்புக் கொண்டனர்.

மின்சார சேவைகளுக்கான ஜெனரேற்றர்களை எடுத்து வருவது பற்றி ஆராயப்பட்டது,

வடபகுதிக்கு தேவையான அரச அலுவலர்களை நியமிப்பது தொடர்பாகவும் பரிசீலனை செய்யப்பட்டது.

நூல் நிலையம் எரித்ததற்கான காரணத்தை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க விசாரணைக் குழு ஒன்று நியமிப்பது பற்றியும் புதிய நூல் நிலையத்தை மீள அமைப்பது பற்றியும் ஆராயப்பட்டது.

# போர் நிறுத்தத்திற்கு இராணுவம் தடை

யுத்த நிறுத்தத்தைக்கொண்டுவருவதன் அவசியம்பற்றியும் விடுதலைப்புலிகள் எடுத்து விளக்கினர். யுத்த நிறுத்தத்தை கொண்டு வந்து ஒரு சமாதான சூழ் நிலையை உருவாக்குவதில் இராணுவம் முட்டுக்கட்டை போடுவதாகவும் சுட்டிக் காட்டினர்.

போர் நிறுத்தத்தால் இராணுவத்தரப்பிற்கு பாதிப்புகள் ஏற்படப்போவதில்லை என்றும் இராணுவம் சந்தேகமும் பகைமை உணர்வும் கொண்டு செயல் படுவதாகவும் புலிகள் குறிப்பிட்டனர்.

போர் நிறுத்தம் செய்வதன் மூலமே சகஜ நிலை தோன்றும் என்பதை வலியுறுத்திய போது பேச்சுவார்த்தையை முன்னெடுக்க அது ஏதுவாக இருக்குமென்றும் குறிப்பிட்டார்.

# போர் நிறுத்தம் நோக்கி அரசு நகரும்

பகைமையைப் படிப்படியாக நீக்கி போர் நிறுத்தத்தை நோக்கி நகர்ந்து செல்ல அரசாங்கம் விரும்புவதாக அரச தரப்புப் பிரதிநிதிகள் கூறினர்.

போர் நிறுத்தம் மூலமாகவே பகைமையை நீக்கி சமாதானத்தைக் கொண்டுவர முடியுமென புலிகள் வற்புறுத்தினர்.

இறுதியில் இது சம்பந்தமாக ஜனாதிபதியுடனும் பாதுகாப்பு அமைச்சுடனும் தாம் கலந்தாலோசிப்பதாக அரச தரப்பினர் கூறினர்.

எங்களது அரசியல் பிரச்சினை தொடர்பாகவும் எதிர்காலத்தில் பேசுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது. இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் இன்னும் பத்து நாட்களில் ஆரம்பமாகும். இருபகுதியினரும் சுமுகமாகவும் நல்லெண்ணத்துடனும் பேச்சுக்களை மேற்கொண்டதுடன் தீர்வு ஒன்று வரும் என்றும் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

## சேதமுற்ற தேவாலயத்தை செய்தியாளர் பார்த்தனர்

(குருநகர்)

கடந்த வருடம் நவம்பர் மாதம் 13 ஆம் திகதி சிறிலங்கா விமானப்படையினரின் குண்டு வீச்சுக்கு இலக்காகி சேதம் அடைந்துள்ள புனித யாகப்பர் ஆலயத்தை வெளிநாட்டு, தென்பகுதி செய்தியாளர்கள் நேற்று முற்பகல் 10-00 மணியளவில் சென்று பார்வையிட்டனர்.

பார்வையிட்டதுடன் சேதமடைந்திருக்கும் ஆலயத் தோற்றத்தையும் பல கோணங்களில படமெடுத்தும் சென்றனர்.

இவர்களின் குழுவில் ரூபவாஹினி படப்பிடிப்பாளரும், வெரித்தாஸ் வானொலிச் செய்தியாளரும் அடங்கியிருந்தனர்.

அதனை அடுத்து மீண்டும் டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி ஆலய பின்வீதியில் சின்னக்கடை பகுதியில் 'சுப்பர் சொனிக்' விமானக் குண்டு வீச்சுக்கு இலக்கான பகுதியையும் மேற்படி செய்தியாளர்கள் பார்வையிட்டும். படமெடுத்தும் சென்றனர். (21)

அரசு வரவேற்பதையும் குழுவினரை விடுதலைப் புலிகள் கடும் பாதுகாப்புடன் வாகனங்களில் அழைத்து செல்வதையும் இதன் போது வீதியின் இரு மருங்கும் பெருமளவில் மக்கள் கூடி நின்றதையும் தமிழீழ காவல்துறை போக்குவரத்து ஒழுங்கை மேற்கொள்வதையும் ரூபவாஹினி ஒளிபரப்பியது

அரசு - புலிகள் தரப்பினரிடையேயான முதற் சுற்று பேச்சும் ஒளிபரப்பாகியது-

## அரச தரப்பு பிரதிநிதிகள் ஹெலி மூலம் சென்றனர்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும் சிறிலங்கா அரச பிரதிநிதிகளுக்கும் இடையே நேற்று முன்தினமும், நேற்றும் நடைபெற்ற பேச்சுக்களை முடித்துக்கொண்டு சிறிலங்கா அரச பிரதிநிதிகள் நேற்று மாலை 3 05 மணியளவில் பலாலி திரும்பினர்.

இவர்களை ஏற்றிச் செல்வதற்கு யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி ஒன்று சரியாக 3 00 மணியளவில் வந்து இறங்கி தரித்துநின்றது

இதேவேளை சரியாக 3.02 மணியளவில் அரச பிரதிநிதிகளும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் விடுதலைப் புலிகளின் விசேட வாகன அணியில் யாழ் பல்கலைக் கழக மைதானத்திற்கு வந்து சேர்ந்தனர் அங்கு வைத்து அரச பிரதிநிதிகளை தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் யாழ் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி, தமிழீழ நிர்வாக சேவைப்பொறுப்பாளர் டொமினிக், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் ரவி ஆகியோர் கை குலுக்கி வழியனுப்பி வைத்தனர்,

இதனைத் தொடர்ந்து சரியாக 3 05 மணியளவில் பொதுமக்களிடம் இருந்தும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளிடம் இருந்தும் அரச பிரதிநிதிகள் விடைபெற்று உலங்குவானூர்தியில் தமது பயணத்தை மேற்கொண்டனர்.

(ப,சி, இ)

## படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## பேச்சுமூலம்

என பதில் அளித்தார்.

இதேவேளை செய்தியாளர் ஒருவர் பூர்வாங்கப் பேச்சுகள் குறித்து நீங்கள் மகிழ்ச்சியடைகின்றீர்களா? என்று கேட்டார். அதற்கு பதிலளித்த கரிகாலன் அரச தரப்பிலிருந்து கிடைக்கும் பதிலில் தான் எமது மகிழ்ச்சி இருக்கின்றது என்றார்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994- 10- 15**

**சனி இரவு**

08. 01 - அறிவியற்கலசம்
08. 10 - நிகழ்வும்பகிர்வும்
08. 25 - நேயர் கடிதங்கள்
08. 30 - செய்திகள்
08. 40 - சித்திரம் - அராலியூர் நல்லதம்பி எழுதிய ''ஈழ வளம்''

**1994- 10- 16**

**ஞாயிறு காலை**

07. 02 - மாவீர வணக்கம்
07. 15 - களத்தில் மலர்ந்தவை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இரத்தினம் வல்லிபுரம்

பருத்தித்துறை ஐயனார் வீதியைச் சேர்ந்த திருமதி இரத்தினம் வல்லிபுரம் நேற்று (14-10-94) காலமானார். இவர் பிரபல வர்த்தகர் வல்லிபுரம் (மொடேர்ன் ரெக்ஸ்ரைல்ஸ்) அவர்களின் அன்பு மனைவியும், திரு. மோகநாதன் (நோர்வே), திரு புவிநாதன், செல்வி கமலராணி, செல்வி கோகுலராணி (நோர்வே), சடகோபன் (நோர்வே) அவர்களின் அன்புத் தாயாரும் குணசீலி (நோர்வே) அவர்களின் மாமியாரும், விஜிதரன் (நோர்வே) அவர்களின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை (16-10-94) ஞாயிற்றுக்கிழமை காலை 8. 00 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
எம். வல்லிபுரம்
(கணவன்)

(9691)

### திருமதி பிலுப்பையா லில்லியம்மா

(அல்லைப்பிட்டி)

திருமதி பிலுப்பையா லில்லியம்மா 14-10-94 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற பிலுப்பையாவின் அன்பு மனைவியும், இராசேந்திரம், காலஞ்சென்ற கிளி, இரத்தினம், மனோன், செல்வரெட்ணம், ஜெயம், பவளம், ஜீவா ஆகியோரின் அருமைத் தாயாரும், மதலேனம், சோமசுந்தரம், றெஜினாமலர், பிரான்சிஸ், நாகலெட்சுமி, றஞ்சிதமலர், கந்தசாமி, மாலினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னார்து இறுதிக்கிரியைகள் 15-10-94 இன்று மாலை 3 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்,

தகவல்:
- குடும்பத்தினர்

இல: 15,
1-ம் ஒழுங்கை,
(ஐங்கரன் வீதி)
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

((9692)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.